# வட மாகாண இலங்கை வங்கியும் அதன் இரண்டு தசாப்த நினைவலைகளும்

ஒரு நாட்டின் வளர்ச்சியில் அதன் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாகத் திகழ்வது நிதியில் சம்பந்தமான கொள்கையும் வங்கி நடவடிக்கைகளும் என்றால் யாரும் மறுத்து உரைப்பதற்கில்லை அந்த வகையில் நமது நாட்டின் வங்கியில் வரலாறு பல்வேறுபட்ட அரசியல் மாற்றங்களாலும் உள்நாட்டில் கடந்த மூன்று தசாப்பதங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் யுத்த சூழ்நிலையாலும் அவ்வப்போது பல படிமான வளர்ச்சிகளுக்கு முகம் கொடுத்து வந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக அரச வங்கிகளில் ஒன்றான எமது இலங்கை வங்கி மக்களுக்காற்றி வரும் சேவையில் முன்னேற்றகரமான மாற்றங்களைக் கொண்டிருக்கின்றது.

எமது இலங்கை வங்கியைப் பொறுத்த வரையில் அதன் ஆரம்ப வரலாற்றில் வடபகுதியைச் சேர்ந்த திரு. சி. லோகநாதன் மிகவும் குறிப்பிடக் கூடியவராக திகழ்ந்துள்ளார். அவர் வடபகுதி வங்கியாளாகளுக்கு உரு முன்னோடியாகவும் பொது முகாமயாளர் பதவியை வகித்த முதல் இலங்கையராகவும் வடபகுதி வங்கியாளர்களுக்கு ஆரம்ப வித்திகராககவும் தோன்றியவர் என்பத இலங்கை வங்கி வரலாறு அறிந்தவர்கள் மறந்திலர். எனவே இலங்கை வங்கி உள்ளவரை நாட்டின் வடபகுதி வங்கியாளர்கள் தன்னிகாற்ற முத்திரை பதித்தமையும் அதன் வெற்றியில் வடபகுதி வங்கியாளர்கள் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் நிதர்சனம்.

அந்த வகையில் வடபகுதி இலங்கை வங்கியின் வங்கியியல் வரலாற்றை நாம் முழுமையாக மீட்டுப் பார்ப்பது என்பதும் அவற்றை சில பக்கங்களுக்குள் அடக்குவது என்பதும் இயலாக காரியமாகையால் கடந்த இரு தசாப்த காலப்பகுதியையாவது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது ஒரு பயிரின் வளர்ந்நியின் எழுச்சியாகக் கொள்ளலாம்.

1989 – 2009 காலப் பகுதி

ஆரம்பத்தில் இலங்கை வங்கியின் கலைமைத்துவம் அதன் கிளைகள் யாவற்றையும் நாட்டின் ஒவ்வொரு மாகாணங்களின் தலைமையின் கீழ் பிரிது அவற்றின் நிர்வாகத்திலுள்ள மாவட்டங்களில் தனித்தனி மாவட்ட காரியாலயங்கள் நிறுவி மேற்பார்வையின் கீழ் இயக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. அது போன்று கிளைகளின் மேற்பார்வையில் விவசாய அபிவிருத்தித் திணைக்களங்களில் இலங்கை வங்கிக்கு ஒரு கிளை (ASC Branch) இயங்கி வந்தது. ஆயினும் வட பகுதியில் 1979 க்கு முன்னர் நிகழ்ந்த வங்கிக் கொள்ளை நடவடிக்கைகளால் அவற்றின் செயற்பாடுகள் முடக்கப்பட்டு பிரதான கினைகளுக்கு மாற்றப்பட்டு இருந்தன இந்நடவடிக்கையானது பரவலாக வாடிக்கையாளர் சேவையில் பாதிப்பினை ஏற்படுத்தின. விவசாயிகளுக்கு வழங்கிய கடன் நிலுவைகள் மீளப் பெறுவதில் வங்கி உத்தியோகத்தர்களுக்கும் பலவித பின்னடைவுகளைக் கொடுத்தது

இவற்றின் செயற்பாடுகள் கிளைகளுக்கு மாற்றப்பட்டிருக்க வட மாகாணக் கிளைகள் யாவும் பின்வருமாறு இயங்கின.

| | |
|---|---|
| வவுனியா மாவட்டம் | வவுனியாக் கிளை |

| | |
|---|---|
| கிளிநொச்சி மாவட்டம் | கிளிநொச்சிக்கிளை |
| முல்லைத்தீவுத் தீவு மாவட்டம் | முல்லைத் தீவுக்கிளை, மாங்குளம் கிளை |
| மன்னார் மாவட்டம் | மன்னார்க்கிளை |
| யாழ் மாவட்டம் | யாழ். மேற்தரக்கிளை |
| | யாழ். இரண்டாம் கிளை. |
| | சுண்ணாகம் கிளை, |
| | பருத்தித்துறைக் கிளை, |
| | சாவகச்சேகரிக்கிளை, |
| | காங்கேசன் துறைக்கிளை |
| | ஊர்கவற்றுறைக்கிளை |
| | மானிப்பாய் கிளை |
| | நெல்லயடிக்கிளை |

என வட மாகாணத்தில் மொத்தம் 14 கிளைக் இயங்கி வந்தன.

இவற்றை விட மன்னார் வவுனியா யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள கச்சேரிகளில் (தற்பொழுது மாவட்ட செயலகம்) ஒவ்வொரு விரிவாக்கற் கிளைகளும் இயங்கி வந்தன.

இவ்வாறான மாவட்டங்களக்கு ஒவ்வொரு மாவட்ட முகாமையாளர்கள் இருந்தார்கள் மாவட்ட காரியாலங்கள் மாகாண ாரியாலயத்தின் நிர்வாகத்தில் இயங்கி வந்தன. வட மாகாண காரியாலயம் கொழும்பில் இயங்கி வந்தது. யுத்த சூழ்நிலை காரணமாக கடிதத் தொடர்புகள் பாதிக்கப்பட்டிருந்தமையால் அனைத்து கடித தொடர்புகளு் வவுனியா மாவட்ட காரியாலயம் ஊடாக கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இக்கால கட்டத்தில் வடபகுதி இலங்கை வங்கி வரலாற்றில் முக்கிய திருப்பு முனையை ஏற்டபடுத்தியமை இந்திய இராணுவ அமைதி காக்கும் படையின் வருகையைக் குறிப்பிடலாம் அன்றைய ஸ்ரீ லங்கா அரசின் மேன்மை தங்கிய ஜனாதிபதி J.R யெவர்த்தனா அவர்களின் அழைப்பின் பெயரில் ராஜிவ் காந்தி – ஜெயவர்த்தனா ஒப்பந்தம் மூலம் 29.07.1987 அன்று இலங்கைக்கு வரவழைக்கப்பட்டு பின்னாளில் 18.09.1990 ல் வெளியேறும் வரை வட பகுதி வங்கியாளர்கள் முகம் கொடுத்த துன்பியல் நிகழ்வுகளையும் வரிகளில் அடக்க வேண்டியது வரலாற்று காலத்தின் தேவையாகும்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் மூன்று மாதங்கள் அமைதியைத் தந்த போதிலும் பின்னாளில் விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டு இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்பட்டார்கள் 16.09.1987 ல் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமிடையே ஆரம்பித்த யுத்தம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கைகயில் ஒரு புறம் திங்கள் வெள்ளிக் கிழமை நாட்களில் விடுதலைப் புலிகள் அரச நிறுவனங்களையும் வங்கி நடவடிக்கைகளையும் நிறுத்தி திறக்க வங்கியை அதன் செயற்பாடுகளை முடக்கி வைக்க அதற்கு எதிராக IPKF கட்டாயப்படுத்தி திறக்க வைத்தார்கள் ஆயினும் சில

மாதங்களாக வங்கிச் செயற்பாடுகள் கிழமையில் மூன்று தினங்கள் மட்டும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இதனால் வங்கி அதிகாரிகள் கைதிகளைப் போன்று இந்திய இராணுவ வாகனங்களில் ஏற்றப்பட்டு வங்கிக்கு கொண்டு செல்லப்பட்டு கைதிகளைப் போன்று இந்திய இராணுவத்திற்கம் இடையெ முறுகல் நிலை ஏற்பட்டு இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்பட்டார்கள் அன்றைய யாழ் மாவட்ட முகாமையாளர் திரு. எஸ் அரியரத்தினம் அவர்களின் தலையீடு காரணமாக பின்னர் இவ் ஊழியர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

இக்காலப் பகுதியில் பருத்தித்துறைக்கிளை முன்னாள் முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் அவர்கள் வங்கியை திங்கள் வெள்ளி திறக்காமையால் துப்பாக்கி முனையில் இரண்டு மூன்று தடவைகள் பயமுறுத்தப்பட்டு பாக்கு வெட்டியில் அகப்பட்ட பாக்கின் கதையாக உயிர்ப் பயம் கொண்டு வாழ்ந்த சோகம் நிறைந்த நாட்களையும் மறப்பதற்கில்லை ஆயினும் இத்தகைய கால கட்டத்திலும் வாடிக்கையாளர் சேவை தொய்ந்து போகக் கூடாது என்பதில் வங்கியாளர்கள் எடுத்த சிரமங்கள் வரலாற்றுப் பதிவுகளுக்குள் அடக்க வேண்யது காலத்தின் கட்டளை.

வங்கிக்கிளைகளுக்குரிய பணப் பரிமாற்றம் (Cash Transport ம் IPKF ன் வாகனத்திலேயே நடைபெற்றது.

அவ்வாறான சூழ்நிலையில் எமது நெல்லயடிக் கிளையின் வங்கி அதிகாரியான திரு. கே. உலகநாதன் அவர்களும் பாதுகாப்பு உத்தியோகத்த்ர் திரு. எஸ். குலசேகரமும் மந்திகையிலுள்ள எமது பருத்தித்துறைக் கிளைக்கு பணம் எடுக்க (Cash Transport) IPKF ன் வாகனத்தில் சென்று கொண்டிருந்த பொழுது வாகனஙத்தின் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட போது வாகனம் பலத்த சேதம் அடைந்த போதிலும் அதில் பயணம் செய்தவர்கள் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவம் ஒன்றும் இக்காலப்பகுதியில் நடைபெற்றது.

மக்கள் பல சிரமங்களுடன் வாழ்ந்தாலும் துன்னபத்தின் த்தியிலும் வலய மகிழ்ச்சியை வரவழைத்தார்கள் ஹிந்தி மொழி தெரியாதவர்கள் தங்கள் வாய்க்குள் நுழைந்த அர்த்தம் தெரியாத சொற்களை பகிர்ந்து கொண்டார் சோதனைச் சாவடிகளில் ஆங்கிலம் தமிழ் தெரியாத இராணுவ வீரரின் ஹிந்தி மொழி புதிய அனுபவங்களைக் கொடுத்தது. வாய் பேசத் தெரிந்தவர்களும் சைகைகள் மூலம் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் காலமாக இரந்தது. வங்கி உறவுகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

1988 – 1994 காலப்பகுதியில் திரு. கே கணேசமூர்த்தி யாழ் மாவட்ட முகாமையாளராக இருந்த பொழுது திரு. க பாலசுப்பிரமணிம் அவர்கள் செயற்பாட்டு உத்தியோகத்தராக இருந்தார் இக்காலப்பகுதியில் எமது வங்கி உறவுகள் பட்ட கஷ்டங்களை தனித்தனியாக பிரித்தெழுதுவதாயின் பல நூல்களை வெளியிடலாம். ஆயினும் ஒன்று இரண்டு நெஞ்சை நெகிழ வைத்த சம்பவங்கள் குறிபிட வேண்டிய தேவை காலப் பொருத்தமானது.

நாட்டின் வட பிராந்தியத்தில் வீதித் தடைகள் ஏற்படுத்தப்ட்டு பொது மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தார்கள் இதற்க வங்கியாளர்களம் விதிவிலக்கல்ல. வடமராட்சியிலிருந்து யாழ் நகர் வருவதாக இருந்தால் 20க்கு மேற்பட்ட சோதனைச் சாவடிகளைக் கடக்க வேண்டியும் அதனால் 5 தொடக்கம் 6 மணித்தியாலயங்கள் போக்கு வரத்து செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டது. (பருத்தித்துறை இல வங்கி பொன்விழா மலர் பக்கம் 65) 30 நிமிடத்தில் பிரயாணம் செய்யும் காங்கேசன் துறை – யாழ் நகர் வீதிப் போக்குவரத்து 230 மணி நேரம் எடுத்தது. அதனால் பொது மக்கள் தங்கள் பாதைகளை இராணுவமற்ற சிறிய வீதிகளுக்க மாற்றி துவிச்சக்கர வண்டிகளை உபயோகித்து பயணம் மேற்கொண்டார்கள். இதனால் பொது மக்களுடன் வங்கியாளர்களும் துவிச்சக்கர வண்டிகளை பதவி வேறுபாடின்றி அதிகமாக உபயோகித்தார்கள். இதற்கு உதாரணமாக அன்றைய செயற்பாட்டு உத்தியோகத்தர் திரு. க பாலசுப்பிரமணியம் தற்போது ஓய்வு பெற்ற வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் அவர்கள் ஒருவரின் செயற்பாடு இவ்விதமாக அமைந்திருந்தது தினமும் 60 கி.மீ தூரத்தை துவிச்சக்கர வண்டியில் காலை வங்கி வருவதும் மாலை வீடு திரும்புவதுமாக வங்கி அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

02.08.1989 ல் திரு என் சிவரட்ணம் தற்போதைய இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் (வட பிராந்தியம்) அவர்களுடைய வல்வெட்டித்துறை வீடும் சொத்துக்களும் அவருடைய Minor Car ம் தியிட்டு கொழுத்தப்பட்டது அவரது விட்டிலிருந்த நெருங்கிய இரு உறவினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களுடைய அழுகிய சடலங்களே பின்னர் எரியுட்டப்பட்டன. அச்சம்பவத்தால் இந்திய இராணுவத்துடன் அவருக்க தகராறு ஏற்பட்ட துன்பியல் நிகழ்வு குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறாக இருந்த போதிலும் நெல்லியடிக் கிளை ஊழியர்களின் அப்பழுக்கற்ற சேவை அவர்களது வங்கிக் கிளையை முதன்மை நிலைக்கு கொண்டு வந்தது அதனால் நெல்லியடிக்கிளை 1990ல் Best Branch) சிறந்த வங்கிக் கிளைக்குரிய பரிசினைப் பெற்றுக் கொண்டது அன்றைய மாவட்ட முகாமையாளர் திரு.கேக. கணேசமூர்த்தி அவர்களும் முகாமையாளர் தீரு. சி. நடராஜலிங்கம் அவர்களும் ஊழியர்களுக்கு சான்றிதழ் கௌரவித்தார்கள் வங்கிக்கு சிறந்த வங்கிக்கான கேடயமும் வழங்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருந்த பொழுது யாழ் - காங்கேசன் துறை விதியில் அமைந்துள்ள எமது சுன்னாகம் கிளை (இக்கிளை 1969ல் எனைய வணிக வங்கிகள் சுன்னாகத்தில் திறப்பதற்கு முன்னர் இலங்கை வங்கியின் அன்றைய இயக்குனர் சபையின் தலைவர் திரு. A.C குணரட்ண அவர்களால் திறந்து வைக்கப்பட்ட பல பழைய வரலாறுகளைக் கொண்ட கிளையாகும்) வாரக் கணக்கில் தற்காலிகமாக மூடப்பட்டிருந்து.

இக்கிளை மீண்டும் திறக்கப்பட்ட பொழுது வாடிக்கையாளர்கள் தமது பணப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கிளையை முற்றுகை செய்து முண்டியத்துக் கொண்டிந்தார்கள் இவ்வேளையில் முகாமையாளராக கடமையாற்றிய திரு.M. பாலசிங்கம் அவர்கள் வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதில் உள்ள சிரமமான சில

நடைமுறைச் சிக்கல்களான தபால்கள் பிரித்து அவரவர் கணக்கிற்க சம்பளம் திர்வையான காசோலைகள் மற்றம் ஏனைய கொடுப்பனவுகள் வரவு வைக்காமல் வங்கியைத் திறக்க முடியாதிருப்பதை எடுத்துக் கூறியும் வாடிக்கையாளர்கள் பெரும் சிக்கல் குழப்பத்தில் இறங்கிளார்கள். அதனால் மக்களை முகாமையாளர் ஒருவாறு சமாளித்தவாறு ஊழியர்களின் அர்ப்பணிப்புள்ள சேவை காரணமாக துரித கதியில் வாடிக்கையாளர்களுக்காக வங்கியை மறுநாள் திறந்து சேவையாற்றினார். இவர் பின்னாளில் வட மாகாண பதில் செயற்பாட்டு முகாமையாளராக பதவி வகித்து ஓய்வு பெற்றார். இத்தனைக்கும் அன்றைய நாட்களில் எரிபொருள் தட்டுப்பாடு மின்சாரமின்மை காகிதிகள் தட்டுப்பாடு என்பன நிலவிய காலம். இது வங்கியின் வரலாற்றில் இவ் ஊழியர்களின் அர்ப்பணிப்பும் திறமையும் வைர வரிகளில் எழுதப்பட வேண்ணடியதற்கு ஒரு எடுத்துக் காட்டு இவ்வாறான செயற்பாடுகள் ஒரு கிளையில் மட்டுமல்ல ஏனைய வங்கிக் கிளைகளிலும் மேலோங்கியே காணப்பட்டது.

இவ்வாறான யுத்த சூழ்நிலையிலும் தொலை நோக்கோடு யாழ் மாவட்டத்தில் அனைத்து வங்கியாளர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்ப கர்த்தாவான மாவட்ட முகாமையாளர் திரு.கே.கணேசமூர்த்தி அவர்களால் யாழ் மாவட்ட அனைத்து வங்கியாளர்கின் நலன் கருதி அன்றைய வங்கி முகாமையாளர்களின் பூரண சம்மதத்துடன் இச்சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் தலைமைத்துவம் இலங்கை வங்கியிடமே கொடுக்கப்பட்டிருந்தது.

இவ் அமைப்பானது வருடா வருடம் ஒரு தினத்தில் ஓய்வு பெற்ற சகல வங்கிகளின் வங்கியாளர்களையும் அழைத்து விழாவாக கொண்டாடி மதிய போசனத்திலும் கலந்து அவர்களின் சேவைகளைக் கௌரவிக்கின்றது.

அதன் தொடர் நடவடிக்கையாக தற்பொழுது உதவிப் பொது முகாமையாளராக இருக்கும் திரு.என். சிவரட்ணம் அவர்கள் தலைமைத்துவத்தை பொறுபேற்று உள்ளார். இவரது முயற்சியினால் யாழ் மாவட்டத்திலேயே வங்கியாளர்கள் மட்டுமல்லாது ஏனையவர்களம் தமது கல்வியைத் தொடர்ந்து கற்பதற்கு ஏதுவாக இலண்டன் வங்கியாளர் பட்டயக் கல்வி நிறவனத்துடன் Chartered Institute of Bankers London) இணைக்கப்பட்டு சிறி லங்கா மாகாண வங்கியாளர் கல்வி நிறுவனம் (IBSL) யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டு அதன் ஆலோசகராக (Conuceller) எமது உதவிப் பொது முகாமையாளர் திரு.என்.சிவரட்ணம் அவர்களையே கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயம் நியமித்தது அவரது செயற்பாடு காரணமாக இப்பயிற்சிக் கல்லூரி (Institute of Bankers of Sr Lanka) வருடா வருடம் யாழ் மாவட்டத்தில் வங்கியாளருக்கான பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடாத்தி வருகின்றது. இம்மாவட்ட பயிற்சிக் கல்லூரி (Regional Center) ஆனது யாழ் நகர மத்தியில் (Jaffna College under Graduate Dept) அமைந்துள்ளது.

23.02.1990 ல் மீண்டும் அதி மேன்மை தங்கிய ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இரண்டாவது தடவையாக பேச்சு வார்த்தை நடைபெற்று இந்தியாவின் ஒத்துழைப்புடன் 24.03.1990 ல் IPKF ன் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி யேற்பட்டது.

காலம் உருண்டடோடியது. கடைசி இந்திய இராணுவமும் திருமலைத் துறைமுகத்திலிருந்து வெளியேறியதும் விடுதலைப் புலிகள் 10.06.1990 பேச்சுவார்த்தையை இலங்கை அரசுடன் கைவிட்டு மீண்டும் விலகிக் கொண்டார்கள். இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் 11.07.1990 இல் மீண்டும் யுத்தம் மூண்டது. யாழ் ஒல்லாந்தர் கோட்டை முற்றுகைக்குள்ளானது அதனால் யாழ். நகரத்தில் தினமும் ெ'ல் வந்து விழுவதும் அதனால் உயிர் சேதங்களும் கட்டிட இடிபாடுகளும் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. யழ் நகர் நோக்கி வருகின்ற பொது மக்கள் வங்கியாளர்கள் பயப் பிராந்தியுடனேயே வரும் பொழுதும் மீண்டும் விடு திரும்பும் பொழுதும் காணப்பட்டார்கள் யாழ் பேருந்து நிலையத்திலும் யாழ் போதனா வைத்தியசாலையிலும் நிரந்தரமாக பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு பல மணி நேரங்கள் பதுங்கு குழிகளுக்குள் வங்கியாளர்கள் செலவிட்டமையால் வங்கி அலுவல்களில் சிரற்ற நிலை காணப்பட்டது.

அதன் காரணமாக மேற்தரக் கிளை மூன்று மாதம் தற்காலிகமாக மூடப்பட்டு இருந்தது அதனை யாழ் பல்கலைக்கழகத்துக்கு இடமாற்றம் செய்து கொண்டு போக நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் செப்டம்பர் 1990 ல் கோட்டை முற்றுகை முடிந்த பிறகு மீண்டும் யாழ். மேற்தரக்கிளை திறக்கப்பட்டு வாடிக்கையாளர் சேவை வழமைக்குத் திரும்பியது.

எனினும் ஜூலை 1990 லிருந்து குடா நாட்டில் பொருளாதாரத் தடையால் எரிபொருள் தட்டுப்பாடு அத்தியாவசியப் பொருட்கள் - குழந்தைகள் பால் மருந்துப் பொருட்கள் ஆகியவற்றின் தட்டுப்பாடு அமுலில் இருந்தது. அதனால் போது மக்களுடன் வங்கியாளர்களும் துவிச்சக்கர வண்டிகளையே உபயோகித்தார்கள் தினமும் பல கடைகள் ஏறி இறங்கி பொருட்கள் கொள்வனவு செய்யும் அவல நிலை ஏற்பட்டது வங்கி உறவுகள் இவு நேரப் பொழுதை குப்பி விளக்கின் வெளிச்சத்தில் காலம் கடத்துனர்.

அதனால் வங்கியின் பணப் பரிமாற்றம் Cash transport கூட துவிச்சக்கர வண்டிகளிலேயே நடைபெற்று இவ்வாறான சூழ்நிலையில் யாழ் குடா நாட்டு வங்கி உறவுகளுக்காக வவுனியாக் கிளை ஊழியர்கள் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்து உத்தியோகத்தரின் அப்பழுக்கற்ற கமையுணர்வு அவர்கள் மக்களுக்காற்றிய பணி வரலாற்று வரிகளில் பொறிக்கப்பட வேண்டியதே.

யாழ் குடா நாடு போன்றே மன்னாரிலும் யுத்தம் கோரத் தாண்டவம் ஆடியதால் 1990ல் மன்னார் பட்டினத்தில் சன நடமாட்டமே இல்லாத அளவிற்கு வெறிச் சொடியது அவ்வேளையில் கூட்டுறவு வங்கிக் கட்டிடத்தில் இயங்கி வந்த எமது வங்கிக் கிளை முற்றாக சேதமுற்றது அங்கிருந்த வங்கி ஆவணங்கள் அனைத்தும் சேதமுற்றன ஒரு வங்கி நிர்வாகமும் இயங்காத நிலையில் மன்னார் அரச அதிபர் வங்கியை நடாத்துவதற்கு எதாவது செய்யும் வண்ணம் கோரியிருந்தார் அவற்றை அன்றைய உதவிப் பொது முகாமையாளர் திரு. B.J வின்சன்ற் அவர்கள் பொறுப்பேற்று எடுக்கக்கூடிய ஆவணங்களிலிருந்து கிடைத்த பேரேடுகளை கொண்டு நடவடிக்கைகளை நடாத்துமாறு திரு.மைக்கல் மரியநாயகம் அவர்களைப் பணித்திருந்தார். அதற்கமைய மன்னார் சணி விலேஜ் என்னும் இடத்தில் ஏனைய வங்கிகளின் செயற்பாடுகளற்ற நிலையில் சிறிய அறை ஒன்றில் இலங்கை வங்கி மட்டும் இயங்கி மக்களுக்கு நம் தேசத்தின்

வங்கியாளர் என்ற மகுடத்தின் கீழ் இயங்குகிறோம் என்பதை நருபித்தார் ஒரு சில ஊழியர்களோடு மட்டும் உதவியாகக் கொண்ட வங்கி நிர்வாகத்தை திரு.மைக்கல் மரியநாயகம் அவர்கள் திறம்பட செயலாற்றினார். ஆனாலும் யுத்தம் தொடர்ந்தும் நடைபெற்றக் கொண்டிருந்தமையால் எமது மன்னார்க் கிளை மீண்டும் புகையிரத நிலைய வீதிக்கும் அங்கிருந்து தபால் கந்தோருக்கு முன்னால் உள்ள சிறிய கட்டிடத்திற்கும் பின்னர் பள்ளிமுனை வீதிக்கும் என ஐந்து தடவைகள் இடம்பெயர்ந்தது. இத்தகைய இடப் பெயர்வுகளின் போது திரு.மைக்கல் மரியநாயகம் ஆற்றிய பணியின் முக்கியத்துவம் பின்னாளில் மன்னார்க் கிளையின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அடிகோலியது என்பதை யாரும் மறுத்துரைக்க முடியா வரலாற்று வரிகள் என்பது மட்டும் உண்மை.

இந்நாட்களில் வங்கியின் சகல துறைகளிலும் மிகவும் அனுபவம் வாய்ந்தவர் என வர்ணிக்கப்பட்டு வந்த வட மாகாணத்தின் உதவிப் பொது முகாமையாளர் திரு.. B.J வின்சன்ற் அவர்கள் ஜனவரி 1992ல் ஓய்வு பெற்றார் அவரது வங்கி வாழ்வு ஓர் உன்னத எடுத்துக்காட்டாக சகலருக்கும் விளங்கியது. அவரைத் தொடர்ந்து செயற்பாட்டு முகாமையாளராக இருந்த திரு.முத்துமணி கனகரத்தினம் அவர்கள் உதவிப் பொது முகாமையாளரானார். ஓய்வு பெற்ற திரு.B.J வின்சன்ற் அவர்கள் வங்கியின் வளர்ச்சிக்கும் அதன் வாடிக்கையாளர்கள் நலத்திற்கும் நற்பயன் கரவல்ல நிதி நிறுவனம் (Unit trust) ஒன்றின் பொது முகாமையாளராக வங்கி நிர்வாகத்தல் நியமிக்கப்பட்டார். ஏனெனில் (Unit Trust) நிறுவனம் இலங்கை வங்கியால் நிர்வகிக்கப்பட்ட ஒரு நிதி நிறுவனமாகும். அதன் பெரும்பாலான பங்குகள் இலங்கை வங்கியிடமே இருந்தன. இது தற்பொழுதும் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

இது இவ்வாறிருக்க மன்னாரில் வங்கி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர விடுதி அமைத்து படிப்படியாக மன்னார் மாவட்டம் புத்தெழுச்சி பெற்றது.

அன்றைய மேன்மை தங்கிய ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவினால் நடை முறைப்பட்டு கொண்டிருந்த ஜனாதிபதியின் நடமாடும் செயலக சேவை (Presidential Mobile Service) வவுனியாவில் 29.30,31ம் திகதி மேமாதம் 1992 ல் நடைபெற்ற போது வங்கியின் விசேட கரும பீடம் வவுனியா மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டு மக்களுக்கு வங்கிச் செயற்பாடுகளிலுள்ள சிரமங்கள் நீக்கப்பட்டு உடன் சேவை வழங்கப்பட்டது இவற்றிற்கு அன்றைய வட மாகாண உதவிப் பொது முகாமையாளர் தீரு. முத்துமணி கனகரத்தினம் அவர்கள் சகல வழிகளிலும் வங்கி உறவுகளுக்கு உதவிகள் புரிந்து நடமாடும் செயலகம் வெற்றி பெற வழி வகுத்தார். அதனால் கடமை புரிந்த ஊழியர்கள் அனைவருக்கும் அரசால் சற் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இக்காலப் பகுதியில் யாழ் குடா நபட்டிலும் ஏப்ரில் மாதம் 1992 ல் மானிப்பாய் மருதடி வினாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ தினங்களில் ஆலய முன்றிலில் வங்கியின் விசேட கரும பீடம் அமைக்கப்பட்டு சுமார் 500 க்குமேற்பட்ட சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 6.1 மில்லியான் பணம் திரட்டப்பட்டது.

அவ்வாறு 18.02.1992 ல் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசாமி ஆலய வருமாந்த மஹோற்சவத்தின் போதும் யாழ் மேற்தரக் கிளை ஊழியர்களால் ஆலய முன்றிலில் வங்கியில் விசேட கரும பீடம் அமைக்கப்பட்டு மக்களுக்கு பயனள்ள வங்கிச் சேவை செய்து பண வைப்புக்கள் திரட்டப்பட்டது. அன்றைய யாழ் மேற்தரக் கிளையின் முகாமையாளர் திருமதி கே.துரைராஜா அவர்களின் வழிநடத்தலில் இந்நிகழ்வு. நடைபெற யாழ் அரச திரு.கே மாணிக்கவாசகர் மேற்படி நிகழ்வில் கலந்து சிறப்பித்தார். இந்நாட்களிலேயே மகளிருக்கான பொற் கணக்க KRG (காந்தாறன் கினும்) எனும் புதிய சேமிப்புத் திட்டம் அறிமுகபப்டுத்தப்பட்டது. இந்நிகழ்வில் வங்கி ரூபா 7.1 மில்லியன் பணம் வைப்பாகத் திரட்டியது.

போர்ச் சூழ்நிலைகள் காரணமாக காங்கேசன் துறை தெல்லிப்பழை, மாவிட்டபுரம், கீரிமலை, குரும்பசிட்டி போன்ற அயல கிராமங்கள் உட்பட மக்கள் செளியேறிய நிலையில் எமது காங்கேசன் துறைக்கிளை இடம் பெயர்ந்து மானிப்பாய் கிளைக்கருகில் இயங்கி வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1996ல் எமது வங்கி பொது முகாமையாளர் திரு.B.A.C பெர்ணாண்டோ அவர்கள் மன்னாருக்கு விஜயம் செய்து மன்னார் கிளையின் வளர்ச்சிக்கு வித்திட்டார் அரச அதிபர் பள்ளிமுளை வீதியில் காணி தரவ ங்கிக்கு புதிய கட்டிடம் அடிக்கல் நாட்டப்பட்டது கட்டிடம் ரூபா 11 மில்லியன் செலவில் முற்றுபப் பெற்று வட மாகாணத்திலேயே சிறந்த அழகான ஒரு கட்டிடமாக இன்று மன்னாரில் விளங்குகின்றது. தங்க நகை அடகுச் சேவையில் இலங்கைத் தீவில் முதலிடத்தில் மன்னார்க் கிளை திகழ்கின்றது. இங்கு தன்னியக்க அட்டைகள் மூலம் பணம் பெறும் இயந்திரம் (ATM) பொருத்தப்பட்டது அதனைத் தொடர்ந்து மன்னார்க் கிளை மேற்தரக் கிளையாகவும் தரம் உயர்த்தி மன்னார் நகர மக்களுக்கு நல்லதொரு சேவை வழங்கும் இக்கிளையின் கீழ் தற்போது முருங்கன் பேசாலை மற்றும் ஏற்கனவேயிருந்த கச்சேரி விரிவாக்கம் கிளையென மூன்று விரிவாக்கற் கிளைகளோடு மன்னார் இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர் என கட்டியும் கூறி நிற்கின்றது.

இது இவ்வாறிருக்க 02.02..1995 யாழ் மேற்தரக் கிளை தனது 50வது ஆண்டு பொன்விழாவினை சிறப்பாக கொண்டாடியது மேற்படி வைபவம் யாழ் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் நடைபெற்றது. போர்க்காலச் சூழல் இருந்து போதிலும் பொன் விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. யாழ் அரசினர் வைத்திய சாலைக்கும் ரூ 150000.00 வழங்கியதோடு திருநெல்வேலியில் அமைந்துள்ள சைவ சிறுவர் இல்லத்திற்கும் சிறுவருக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

போர் மேகம் குடா நாட்டிலும் வன்னிப் பகதியிலும் தொடர்ந்தும கருக்கட்டத் தொடங்கியதால் மனித வாழ்வு அங்கொன்று இங்கொன்றாக அழித்தொழிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் முல்லைத்தீவு கிளையும் அதன் மாவட்டக் காரியாலயமும் யுத்தின் தாக்கத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் நிரந்தரமாக அங்கு இருந்து ஊழியர்கள் கடமை புரிய முடியா நிலைக்கு தள்ளப்பட்டு சில மாதங்கள் மூடப்பட்டு இருந்தது.

வவுனியாவிலும் எமது வவுனிக் கிளை சில மாதங்கள் மூடப்பட்டு மீண்டும் திறக்கப்பட்ட போது அங்கு கடமையாற்றிய ஊழியார்கள் தங்குமிட வசதி வெளியில் கிடைக்காமையால் வங்கிக் கட்டித்திலேயே முகாமையார் விடுதியிலும் பிரதேச முகாமையாளர் விடுதியிலும் தங்கி தமது கடமைகளை ஆற்றி வந்தார்கள்.

காலம் உருண்டோட சீரான போக்கு வரத்து வசதிகள் கிடைக்காமையால் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கணெர்ட ஊழியர்கள் மாதமொருமுறை அல்லது இருமுறை தமது கும்ப உறவினர்களைப் பார்ப்பதற்காக வவுனியாவிலிருந்து 90 மைல்களையும் துவிச்சக்கர வண்டி மூலமாகவே பிரயாணம் செய்து கிளாலி கடலேரியையும் கடந்து பல சிரமங்களை போக்குவரத்தில் அனுபவித்து கொண்டே கடமையை செய்தார்கள்

அதி மேன்மை தங்கிய ஜனாதிபதி ஆர் பிரேமதாஸா அவர்கள் ரூ 600 மில்லியன் பணத்தை மீள் குடியேற்றத்திற்காக ஒதுக்கி பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு 2000.00 ஆகவும் 5000.00 ஆகவும் எமது கிளைகள் ஊடாக பிரித்து கொடுக்கப்பட்டது.

இவ்வாறான நாட்களில் வவுனியா மாவட்ட முகாமையாளராக இருந்த திரு. என் சிவன் அவர்கள் வவுனியாவில் தமது அலுவலகத்தைக் கொண்டிருந்தாலும் தமக்குக் கீழ் இயங்கி வந்த கிளிநொச்சி மாங்குளம் போன்ற கிளைகளை மேற்பார்வை செய்வதற்கும் கிளைகளின் ஒழுங்கான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்குமாக தமது துவிச்சக்கர வண்டியிலேயே மாதம் ஒரு தடைவ அல்லது இரு தடைவ 50 – 60 மைக்கள் பிரயாணம் செய்து வங்கிக் கிளைகைள மேற்பார்வை செய்து கடமை ஆற்றி வந்தார்.

இலங்கை மேன்மை தங்கிய ஜனாதிபதி பிரேமதாஸா அவர்களுடைய மறைவுக்குப் பின்னர் திருமதி சந்திரிகா குமார துங்கா அவர்கள் நாட்டின் தலைவியாகப் பொறுப்பேற்றதும் அவருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை பேச்சு வார்த்தைக்கு இலங்கை வங்கியின் தலைவர் திரு. ஆசீர்வாதம் அவர்கள் யாழ் வருகை தந்த பொழுது இலங்கை வங்கி உறவுகளோடும் கலந்துரையாடல் ஒன்று நிகழ்த்தினார்.

இந்நாட்களில் யுத்தம் காரணமாக முற்றாகக் செயலிழந்திருந்த எமது முல்லைத்தீவு கிளையின் கட்டிடம் பலத்த சேதமடைந்திருந்தது. கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த வங்கி ஆவணங்கள் தொடர்ந்து பெய்த மழை பனி கோடைகால வெயில் காரணமாக முற்றாக பழுதடைந்த நிலையில் இருந்த ஆவணங்களை முகாமையாளர் திரு.எஸ் விக்னராஜா அவர்கள் தமது ஓர் இரு உத்தியோகத்தர் சகிதம் இலங்கை இராணுவத்தின் ஹெலிக்கொப்டரில் முல்லைத்தீவு சென்று முடிந்தவரையில் எடுக்கக்கூடிய ஆவணங்கள் பேரேடுகள் போன்வற்றைற வவுனியா பிரதேச காரியாலயத்திற்கு எடுத்து வந்து கணக்குகள் சீர் செய்யப்பட்டு வங்கிக்கிளையை அதன் செயற்பாடை நல்ல நிலைக்கு கொண்டு வந்தார் அதன் நடவடிக்கைகள் யாவும் சிறிது காலம் வவுனியாப் பிரதேச காரியாலயத்திலேயே நடைபெற்று வந்தன அன்றைய நாட்களில் மாவட்ட முகாமையாளராக இருந்த திரு.என்.சிவன் அவர்கள் பின்னாளில் வடமாகாண செயபாட்டு முகாமையாளராக பதவி உயர்வு பெற்று பின்னர் 1.06.1998ல் ஓய்வு பெற்றார்.

காலம் உருண்டது 1996 மீண்டும் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே யுத்தம் மூண்டது ஆரம்பத்தில் இலங்கை இராணுவத்தின் முன்னேறிப் பாச்சல் நடவடிக்கையால் மக்கள் இடம்பெயர் அவர்களுடன் சேர்ந்து எமது சுன்னாகம்,மானிப்பாய்,மற்றும் காங்கேசன்துறைக் கிளைகள் பிரதேச காரியாலயத்திற்கு இடம்பெயர்ந்தன.

இந்நாட்களில் சுன்னாகம் கிளையில் கடமை புரிந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு. பாலசுப்பிரமணியம் என்பவர் இராணுவ சூட்டுக்கு இலக்காகி கடமை நேரத்தில் உயிரிழந்தார்.

இவ்வாறு போர்க் காலச் சூழ்நிலையால் மக்கள் புலம் பெயர் அவர்களுடன் வங்கி கிளைகளும் அவற்றின் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டு வடபகுதியிலுள்ள பல கிளைகள் வேறு இடஙகளுக்கு மாற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு

| கிளையின் பெயர் | மாற்றப்பட்ட இடம் |
|---|---|
| சுன்னாகம் | இ.வ. பிரதேச காரியாலயம் - யாழ்ப்பாணம் |
| காங்கேசன்துறை | இ.வ.பிரதேச காரியாலயம் - யாழ்ப்பாணம் |
| மானிப்பாய் | இ.வ.பிரதேச காரியாலயம் - யாழ்ப்பாணம் |
| ஊர்காவற்துறை | யாழ்.2ம் கிளை – யாழ்ப்பாணம் |

இவ்வாறு மாற்றப்பட்ட கிளைகளில் ஊர்காவற்துறைக் கிளையின் புலம் பெயர்ந்த கதையே வங்கி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று 1973ல் ஒரு சுங்க இலாகாகட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்கிளை யத்தம் காரணமாக இதன் அமைவிடம் மிகவும் பாதுகாப்பற்ற இடத்தில் இருந்தமையால் முதலில் 5 கி.மீ தொலைவில் உள்ள காம்பொன் என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது இதனை மாற்றுவதற்கு முன் அனுமதி கோரி தலைமையகத்தில் இருந்து வரும் பதிலுக்காகக் காத்திருந்தால் ஒரு ஆவணம் கூட திருப்பி எடுப்பதற்கு வங்கியிருக்காது அதற்கு சாட்சியாக அதன்அடைவிடத்தில் அழிந்து போயுள்ள கட்டிடத்தின் எச்சங்கள் இன்றும் கூட சாட்சியம் பகர்கின்றன அதன் பின்னரம் யுத்தம் துரத்தவே இக்கிளையானது வாகன வசதிகளற்ற இக்கிளையின் ஊழியர்கள் முகாமையாளருடன் தோள்மீதும் துவிச்சரக்கர வண்டி மீதும் ஏற்றி கரம்பனிலிருந்து 6 கி.மீ துரத்திலுள்ள சுருவிலுக்கும் 22.09.1990 ல் இடம் பெயர்ந்தார்கள் மீண்டும் அதே மாதம் 7 கி.மீ துரத்திலுள்ள நாரந்தனைக்கு அதே மாதம் பாணியில் புலம் பெயர்ந்தார்கள் இத்தனைக்கும் அன்றைய முகாமையாளராக கடமையாற்றிய ஓய்வ பெற்ற வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திரு.பொ.அ. அருமைநாயகம் தன் குடம்பத்தைவிட வங்கியை நேசித்தார் அவரும் திடசங்கற்பம் புண்டிருந்தார் எது வரினும் வங்கி ஆவணங்களை காத்தே திருவேன் என்ற குறுக்கோளுடன் செயற்பட்டார் மீண்டும் சோதனை துரத்தவே இறுதியாக முடிவெடுத்து துவிச்சரக்கர வண்டியிலும் மாட்டு வண்டியிலுமாக ஆவணங்களை பத்திரமாக யாழ் 2ம் கினைக்கு கொண்டு வந்து சேர்த்தார். அங்கேயும் சோதனை துரத்திவே குடா நாட்டு மக்களின் ஒட்டு மொத்த இடம்பெயர்வின் போது 1995ஒக்டோபரில் மீசாலைக்கு இடம்பெயர்ந்தது மீண்டு இக்கிளை அதன் சொந்த இடம் செல்ல முடியாமல் தற்போதும் கூட வேலணையில் பொருத்தமற்ற பெயரோடு புலம்பெயர்ந்திருக்கிறது. இது ஒரு வரலாற்றுச் சாதனை என்பதை யாரும் மறுத்துரைக்க முடியாத தசப்பான அனுபவங்களை காவிச்

சென்ற உண்மை ஆனால் இன்று எமது நாடளாவிய ரீதியிலான (ICBS) வலைப்பின்னலில் 300 ஆவயது கிளையாக 03.03.2008 திகதியன்று இணைந்து திறம்பட திரு.கே.சிவஞானசுந்தரம் எனும் முகாமையாளர் தலைமையில் இயங்குகின்றது.

அந்த வகையில் 1995 ஒக்டோபரில் வரலாறு காணாத மாபெரும் இடப்பெயர்வு நடந்தது வலிகாமத்திலள்ள சகல மக்களும் ஒரே இரவில் கடுமையான கொட்டும் மழையின் மத்தியிலும் லட்சுக் கண்ணில் கால் நடையாக உடைமைகளையும் கைவிட்டு வடமராட்சி தென்மராட்சி போன்ற இடங்களுக்கு குறுகிய யாழ் குடா நாட்டுக்கான நுழைவாயிலூடாக இடம்பெயர்ந்தார்கள். அன்றைய நாள் கால்நடைகளோ சிறுவர்களோ பெண்களோ கர்ப்பித் தாய்மாரோ வேறுபாடில்லாது ஒட்டுமொத்தமாக இடப்பெயர்ந்தார்கள். இந்நிலையில் வங்கி உறவுகள் மட்டும என்ன விதி விலக்கா?

இந்தக் காலப் பகுதியில் வடபகுதி வங்கிகளில் திரவப் பணத்துக்கும் தட்டுப்பாடு நிலவியது ஆயினும் வட பகுதியின் சிரேஷ்ட முகாமையாளர்களும் பிரதேச முகாமையாளரும் வங்கிப் பணியை தொடர்ந்து நடத்திட திட சங்கற்பம் பூண்டு மக்களோடு மக்களாக வங்கிக் கிளைகளையும் புலம் பெயர் வைத்தார்கள் எமது வாழ்வுக்கு உறுதுணையாக நின்று கடமை உணர்வை தலை மேற் சுமந்தார்கள் வங்கி ஆவணங்கள் இல்லை காகிதாதிகள் இல்லை ஊழியர்களக்கு மாற்றுடை வசதியில்லை ஆயினும் வங்கி நடவடிக்கை தொய்ந்து போகாது துணிந்து செயல்பட்டது தலைமைக் காரியாலயத்துடன் தொடரபுகள் ஏற்படுத்துவதற்கு ஒரே வழியாக CARE INTERNATIONAL வானொலி தொடர்பு மூலம் கிழமையில் ஒரு நாள் மட்டும் என்ற நிலையில் தொடர்பு கொண்டு வங்கியின் செயற்பாடுகள் நடாத்தப்பட்டன. இலங்கை வரலாற்றில் இப்படியும் ஒரு வங்கிச் சேவையா என்று தேசத்தின் வங்கியாளர் என்ற மகுடத்தின் கீழ் வட பகுதி வங்கிக்கிளைகள், அல்லல்பட்ட மக்களுக்காக தோள் கொடுத்தது.

எமது யாழ் மேற்தரக் கிளை பருத்தித்துறைக்கு நரை ஏனைய எல்லாக் கிளைகளும் தென்மராட்சியில் தற்காலிமாக கிடைத்த கட்டிடங்களில் இயங்கத் தொடங்கின. காங்கேசன்துறைக் கிளை சாவகச்சேரிக்கிளையில் இயங்கியது ஊர்காவற்துறைக்கிளையும் யாழ் இரண்டாம் கிளையும் தென்மராட்சி மீசாலையிலுள்ள கமநல சேவைத்திணைக்களத்தில் இயங்கின. சுன்னாகம், மானிப்பாய் ஆகிய கிளைகளுடன் யாழ் மாவட்ட காரியாலயம் சாவகச்சேரியிர் தனியார் கட்டிடம் ஒன்றில் இயங்கின.

இதற்காக அரும் பணியாற்றியவர்களை வங்கி வரலாறு உள்ளவரை வைர வரிகளில் அடக்கியே வைத்திருத்தல் வேண்டும். அன்றைய மாவட்ட முகாமையாளர் திரு. சண்முகசுந்தரம் செயற்பாட்டு உத்தியோகத்தர் திரு. க. பாலசுப்பிரமணியம் கிரேஷ்ட முகாமையாளார்கள் திரு. என். சூரியசாதன், திரு.பொ. அ. ஆருமைநாயகம், திரு. எஸ் சிவரட்ணம் (தற்போதைய உதவிப் பொது முகாமையாளர் - வட பகுதீ) திரு. வி. ஐயம்பெருமாள், திருமதி கே. துரைராஜா, திரு. தி தங்கேஸ்வரன் திரு. எஸ் சிநாதன் திரு. ஏ.ரி.ஏ தேவராஜா ஆகிய வடபகுதி வங்கியின் நாயகர்களை என்றும் வங்கி வரலாறு தாங்கி நிற்கும்.

வடமராட்சியைச் சேர்ந்தவரும் தற்போதைய எமது உதவிப் பொது முகாமையாளரும் ஆகிய திரு. ந. சிவரட்ணம் மற்றம் திரு. T.புவனேந்திரன் (தற்போதைய அச்சுவேலிக்கிளையின் முகாமையாளர்) ஆகியோருடைய தியாகத்தினாலான சேவையிலேயே பருத்தித்துறையில் யாழ் மேற்தரக்கிளையும் சாவகச்சேரியில் ஏனைய கிளைகளும் சேவையாற்றக்கூடியதாக அமைந்தது. தேவையான சகல உபகரணங்களம் (Logistic Suprim) இவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டது. காவலாளியின் (Watcher) கடமை தொடக்கம் முகாமையாளர் கடமை வரை இவர்களே புரிந்துள்ளனர் ஆனால் இவர்களுக்கு மட்டும் அல்ல இத்தகை தன்னலமற்ற சேவை புரிந்த எவருக்கும் தலைமையகத்தால் எத்தகைய பாராட்டும் வழங்கப்படவில்லை என்பது மட்டும் ஒரு கசப்பான வரலாற்று மனக்குறை.

இவ்வாறான ஒரு கட்டத்தில் உயர் அதிகாரியாக இருந்த திரு. பிறட் என்பவர் இடம் பெயர்ந்திருந்து வங்கியில் கடமை முடிந்து துவிச்சகரக்க வண்டியில் வீடு திரும்பிச் செல்லும் பொழுது இருதய நோயினால் பாதிக்கப்பட்டு மரணமானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாட்களில் திரவப்பணத்தட்டுப்பாடு காரணமாக இரண்டாவது தடவையாக pay order Banking என்றழைக்க்கப்பட்ட காசோலைப் பரிமாற்றம் நடந்தது அதாவது பணம் மீளப்பெறும் வாடிக்கையாளருக்கு வங்கிக் காசோலைகளே வழங்கப்பட்டன. ஆரம்பத்தில் 1989ல் யாழ் குடாநாட்டு வங்கிகளிடையே இந் நடைமுறையானது கைக்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அக்காசோலைகளை வர்த்தகர்கள் சிறிய தரகுப்பணம் பெற்றுக் கொண்டு மாற்றிக் கொடுப்பார். இது இவ்வாறு இருக்க திரவப் பணத்தட்டுப்பாட்டை நீக்குவதற்காக திருமதி கே. துரைராஜா அவர்கள கப்பலில் தலைநகர் கொழும்பு சென்று திரவப் பணத்தட்ப்பாடு நீங்க வழி அமைத்துக் கொடுத்தார் அவர் கொழும்பு செல்ல அவரது இடத்திற்கு பதவி உயர்வு பெற்ற திரு.வி. தில்லைநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள் இவர் ஒரு தொழிற்சங்க வாதியாக சகல ஊழியர்களுக்கும் தொந்தரவாக 1974 – 1976 காலப் பகுதியில் வங்கி ஊழியர்களின் வங்கி வழக்காற்று வழக்கறிஞர்களில் எதிர் தரப்பு வாதம் செய்து வெற்றி கண்டவர் பன் நாளில் இவர் 09.1998 ல் ஓய்வு பெற்றார்.

இது நடந்த போது 1996 ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் இராணுவத்தினரின் (Rivirasa 3) நடவடிக்கை மூலம் யாழ் குடா நாட்டில் வலிகாமம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட யாழ் மேற்தரக்கிளைக் கட்டடத்தில் யாழ் மூன்றும் கிளை என்ற ஒரு கிளை இயக்கப்பட்டது. இதற்குரிய பணியாளர்கள் கொழும்பிலிருந்து வந்தார்கள். அவ்வாறு காரை நகரிலும் ஒரு கிளை அங்குள்ள மக்களுக்காகவும் இலங்கை கடற்படை இராணுவத்தினரின் கொடுக்கனவுகளை நிறைவேற்றவும் ஆரம்பிக்கப்பட்டது. இக்கிளைதனில் கடமை புரிவதற்காக திரு. வு. தவபாலன் (தற்போது கோப்பாய் விரிவாக்கற் கிளை முகாமையாளர் 28.08.1998ல் திருகோணமலையிலிருந்து 141 பயணிகளுடன் காரை நகர் நோக்கிய பயணம் செய்து கொண்டிருந்த பொழுது கப்பல் இரவு 1.00 மணியளவில் விடுதலைப்புலிகளால் கடலில் இடைமறிக்கப்பட்டு முல்லைத்தீவு நோக்கிய கடத்தப்பட்டது. இச்சம்பவத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவத்தால் சக பயணிகளுடன் மிகுந்த மனக் குளப்பத்தின் மத்தியில் விடுவிக்கப்பட்டட எமது

ஊழியர் சகல வாழ்வுக்குத் திரும்பவதற்கு ஒரு சில தினங்கள் எடுத்தது என்பதும் வரலாற்றுக்குள் அடக்க வேண்டிய கட்டாயத்தின் தேவையாகும்.

வலிகாமம் இலங்கை இராணுவத்தால் விடுவிக்கப்ட்டதை அடுத்து வந்த இராணுவ நடவடிக்கையால் தென்மராட்சியில் சாவகச் செரி கொடிகாமம் முதலிய இடங்கள் விடுவிக்கப்பட்டமையை தொடர்ந்து மே 1996ல் பருத்தித்துறையம் இராணுவத்தினரால் விடுக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து குடாநாடு முழுவதும் இராணுவத்தினரின் பரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர கிளைகள் பழைய இடங்களுக்கு வந்தன.

1996 ஏப்ரல் மாத இறுதியில் மூன்றாம் கிளை முடிவுக்கு வந்தது ஆனால் காரைநகர் கிளை தொடர்ந்தும் ஒரு கிளையாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது பல மாதங்களாக தடைப்பட்டிருந்த தபால்கள் பிரிக்கப்பட்டு கணக்குகளும் சீர் செய்யப்பட்டன.

இது இவ்வாறு இருக்க சுன்னாகம் கிளை பாதுகாப்பு காரணங்களுக்காக சுன்னாகம் சந்தியில் இரு கடைகளிலும் காங்கேசன் துறைக்கிளை மல்லாகம் சந்நியிலுள்ள தனியார் கட்டடத்திலும் ஊற்காவற்துறைக்களை யாழ் இரண்டாம் கிளை கட்டடத்திலும் இயங்கி வந்தன பின்னர் இக்கிளை வேலணை வங்களாவடி சந்திக்கு இடம் பெயர் சுன்னாகம் கிளை சுன்னாகத்தில் பழைய கட்டடத்திற்கும் வந்தன.

இன்றும் வட காங்கேசன் துறைக் கிளையும் ஊர்காவற்துறைக் கிளையும் பழைய பெயரோடு பொருத்தமற்ற இடங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது. என்பது வாடிக்கையாளர்களின் வேதனைகளோடு குறிப்பிட வேண்டிய வரலாற்று உண்மை.

தற்பொழுது காங்கேசன் துறைக் கிளை மல்லாகத்தில் பிறிதொரு கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறதுஇதன் முகாமையாளர் திரு.Pபிரான்சிஸ் அவர்கள் இளநிலை வங்கியாளர்கள் தமது வங்கி நடாத்தும் பரீட்சைகளில் சத்தி எய்துவதற்கு எதுவாக அவர்களை தயார்படுத்துவதற்கான வகுப்புக்களை நடாத்தியும் அவர்கள் கற்றுத் தேர்வதற்கு பாட நூல்களை வெளியிட்டும் வங்கி உறவுகளுக்காக தனது அர்ப்பணிப்பு சேவையை ஆற்றி வந்தார். இதனால் இளநிலை அதிகாரிகளுக்கு நடைபெற்ற தகுதி காண் போட்டிப் பரீட்சையில் அதிகமான உத்தியோகத்தர்கள் சித்தி அடைந்தார்கள் மேலும் இவரது அரிய இம்முயற்சிக்கு எமது உதவிப் பொது முகாமையாளர் திரு. என சிவரட்ணம் அவர்கள் தமது ஆதரவையும் நல்கயிருந்தார்.

இது இவ்வாறிருக்க 26.06.1996 ல் வுவினாயவில் இலங்கை வங்கி ஊழியர்களுக்கென ஒரு விடுதி திறந்து வைக்கப்பட்டது. இதன் திறப்பு விழாவிற்க கௌரவ சபாநாயகர் திரு.இரத்நாயக்கா அவர்கள் வருகை தந்து கலந்து சிறப்பித்தார். இக்காலப்பகுதியில் எமது வடமாகாண உதவிப்பொது முகாமையாளராக இருந்த திரு. முத்துமணி கனகரத்தினம் அவர்கள் பின்னாளில் தமது 39 வருட சேவையின் பின்னர் 11.11.1998 ஓய்வு பெற்றார்.

இக்காலகட்டத்தில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை மேலோங்கியிருக்க வேயைிலும் எமது மானிப்பாய் கிளையின் முன்னாள் முகாமையாளர் திரு. CN நவரத்தினராஜா அவர்கள் தமது 68

வது வயதில் வங்கியாளர் பரீட்சையில் (AIB) இறுதித்தோலில் சித்தியெய்தி இளைஞர் களுக்கெல்லாம் முன்மாதிரியாகவும் கல்விக்கு வயதில்லை கிடையாது என்ற துணி முத்திரையும் பதித்தயை இங்கு குறிப்பிடத்தக்கது.

முன்னதாக மே மாதம் 13ம் திகதி 1998 யுத்த சூழ்நிலையில் இராணுவத்தினரின் சத்ஜெய நடவடிக்கையால் எமது கிளிநொச்சிக் கிளை 40கி.மீ தொலைவிலுள்ள வன்னேரிக்குள பகுதியில் அமைந்துள்ள நீர்ப்பாசன திணைக்கள கட்டிடத்திற்கு இடம் பெயர்ந்தது. போக்குவரத்து வசதிகளற்ற நிலையில் வங்கியின் சகல ஆவணங்களம் ஊழியர்களின் அர்ப்பணிப்புள்ள சேவையினால் பலத்த உயிர் ஆபத்து நிறைந்த நிலையில் கட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. வங்கியின் பாதுகாப்பப் பெட்டகம் வாகன வசதியின்றி வங்கி ஊழியர்களினால் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலையில் வங்கிப் பணம் வெறும் சிறிய பைகளில் வைக்கப்பட்டு சிறிய அலுமாரிகளில் வைக்கப்பட்டு வங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது ஆயினும் சில மாதங்களில் இவை சரி செய்யப்பட்டது அன்றைய முகாமையாளர் திர. எஸ் பெரியதுரை சமூமளிக்காத நிலையில் இவற்றிற்காக முன்னின்று செயல் வடிவம் கொடுத்த நிறைவேற்று அதிகாரி திரு.T.A. கோபாலசந்திரநாயகமும் ஏனைய உத்தியோகத்தர்களம் வரலாற்ற வரிகளுக்குள் அடக்கப்பட வேண்டியது கட்டாயத்தின் தேவையாகும்.

இவ்வாற வன்னியில் மாங்குளம் கிளை மல்லாவி துணுக்காயில் அமைந்துள்ள விவசாய திணைக்கள கட்டிடத்திற்கும் முல்லைத் தீவுக்கிளை புதுக்குடியிருப்புக்கு கமநல சேவைக் கட்டிடத்திற்கும் இடம் பெயர்ந்தன.

முன்னதாக மாங்குளம் கிளையின் சகல ஆவணங்களும் மிகவம் பாதுகாப்பான முறையில் இடமாற்றம் செய்த அன்றைய முகாமையாளர் திரு. தவயோகம் அவர்களும் வரலாற்று மைந்தனாக கணிக்கப்பட வேண்டியவர் காரணம் அவரின் செயலால் மாங்குளம் ஆவணங்கள் அனைத்தும் காக்கப்பட்டன இல்லையேல் மாங்குளம் இராணுவ முகாம் தாக்கப்பட்ட போது அக்கிளைக்கு அருகில் எமது கிளை அமைந்திருந்தமையால் முற்றாக அழிவுற்றிருந்திருக்கும் பின்னாளில் அக்கிளைக்குரிய கட்டிடம் மேற்படி யுத்தத்தின் போது தரைமட்ட மாகி காட்ச அளித்திருந்தமையும் கட்டிக் காட்ட வல்லது பின்னர் இக்கிளை மல்லாவி நகருக்கு இடமாற்றம் பெற்றது.

இந்நாட்களில் வடபகுதியின் செயற்பாட்டு முகாமையாளராக இருந்த திரு.என். தங்கராஜா அவர்கள் 1999ல் காலமானார்.

ஆனையிறவு வீழ்ச்சிக்குப் பின்னர் கிளிநொச்சிக் கிளை மீண்டும் கிளிநொச்சி நகருக்கு வந்தது. ஆனால் பழைய கட்டிடம் யுத்தம் காரணமாக சேதமடைந்த நிலையில் இருந்தமையால் பிறிதொரு கட்டிடத்தில் இயங்கியது.

2000 ஆம் ஆண்டு உக்கிர சண்டை காரணமாக சாவகச்சேரிக்கிளை மூடப்பட்டு எவ்வித ஆவணங்களும் இல்லாமல் பருத்தித்துறை கிளைக்கு இடமாற்றம் அடைந்து வாடிக்கையாளர் சேவையை நிகழ்த்தி வந்தது. அக்காலகட்டத்தில் சில ஊழியர்களின் உதவியுடன் ஓய்வு பெற்ற உதவிப் பொது முகாமையாளர் திரு.க. பாலசுப்பிரமணியம் அவர்களும் சிரே'ட பாதுகாப்பு

உத்தியோகத்தர் திரு.W.D.L.B அபேயவர்த்தனா சாவகச்சேரி முகாமையாளர் திரு.எஸ் சந்திரகுமார் பாதுகாப்பு உத்தியோகத்தர்களான திரு.எஸ் பரமநாதன் திரு.நடேசமூர்த்தி போன்றோரும் மிகுந்த உயிராபத்துக்கு மத்தியில் துப்பாக்கிச் சமர் நடந்து கொண்டிருந்த வேளையில் சாவகச்சேரிக்கிளை ஆவணங்களை பருத்தித்துறக்கு எடுத்து வந்தனர்.

பின்னர் அவ் ஆவணங்களுடன் சாவக்கேசரிக் கிளை யாழ் பிரதேச காரியாலயத்தில் இயங்கத் தொடங்கியது பின்னர் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க இக்கிளை அச்சுவேலிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

அது போன்று யாழ் மேற்தரக்கிளை ஊழியர்களால் ஆவண 2001 நல்லுஸர் ஆலய வருடாந்த மஹோ உற்சவத்தின் போது விசேட கருமபீடம் அமைக்கப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை வழங்கப்பட்டது.

இந்நாட்களில் பருத்தித்துறைக் கிளையிலும் சுன்னாகம் கிளையிலும் வெளிநாட்டு நாணய பிரிவு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2001 ல் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றலில் 3ம் 5ம் திகதி ஆனி மாதம் வருடாந்த மஹோற்சவ் நாட்களில் வங்கியின் விசேட கருமபீடம் ஒன்று அமைக்கப்பட்டு வைப்புக்கள் கிரட்டப்பட்டது. இதில் நிறைவேற்ற அதிகாரி திரு எல். லெட்சமணசர்மா (தற்போதைய மானிப்பாய் கிளை முகாமையாளர்) அவர்கள் திறமையாக வழிநடத்தி ரூ 41 மில்லியன்களை வைப்பாகத் திரட்டினார்.

இவ்வாறு வங்கியின் செயற்பாடுகள் யுத்தம் காரணமாக தடைத்ப்படாமல் சிரமத்தின் மத்தியிலும் செயற்பட்டமையால் அன்றைய எமது உதவிப் பொது முகாமையாளர் திருமதி I.P இரத்தினதுரை அவர்கள் இதற்காக உழைத்த ஊழியர்களுக்கு பாராட்டுத் தெரிவித்து அவர்களின் சிறந்த சேவைக்காக கடிதமும் வழங்கியிருந்தார்.

அதன் பின்னர் விடுதலைப்புலிகளுடன் அரசு சமாதானம் செய்து A9 பாதை திறக்கப்பட்டு யாழ் நகர் பழமைக்கு படிக்கடியாக திரும்பிக் கொண்டிருந்த நிலையில் சாகவச்சேரிக்கிளை இடமாற்றம் பெற்ற போது அச்சுவேலி வாடிக்கையாளரின் வேண்டு கோளுக்கமைய அச்சுவேலியில் சுன்னாகம்கிளையின் கீழ் இயங்கத் தக்கதாக ஒரு விரிவாக்கற் கிளையாக சாவகச்சேரிக் கிளை இயங்கிய அதே கட்டிடத்தில் திறக்கப்பட்டது.

பல தசாப்தங்களின் பின் முதல் தடவையாக யாழ் நகரில் பயிற்சிப் பட்டறை

2001மார்ச் மாதத்தில் இலங்கை வங்கி யாழ் குடாநாட்டு ஊழியர்களின் நலன் கருதி திரு.க. பாலசுப்பிரமணியம் அவர்களின் தனி முயற்சியினால் யாழ் கல்கலைக்கழகத்தில் வங்கி பயிற்சி வகுப்புக்கள் 9ம் 10ம் திகதிகளில் கொழும்பிலிருந்து திரு. B.M பிரேமரத்தினா (C.T.I)தலைமையில் விசேடமாகத் தருவிக்கப்பட்டவர்களால் நிகழ்ந்தப்பட்டன. இந்நிகழ்வுக்கு எமது

பிரதப் பொது முகாமையாளர் திருவாளர் B.A.C பெர்ணாந்து அவர்கள் திருS.K சிவசாதன் (A.G.M 2nd Corporate) திரு.து. இராவேந்திரா (A.G.E. Treasury) ஆகியோர் வருகை தந்திரந்தனர் யாழ் நகரின் வங்கிக் குறைபாடுகள் பற்றி நேரடியாக தமக்கு தனியார்கள் எடுத்துரைக்க முடியும் என சகல ஊழியர்களடனும் கலந்துரையாடினார் இப்பயிற்சி வகுப்பின் பொது பிரசன்னமாகி இருந்த எமது முன்னாள் யாழ் பிரதம முகாமையாளரும் அன்றைய உதவிப் பொது முகாமையாளர் (Training) திருமதி ஆர் துரைராஜப அவர்கள் இத்தகைய அரிய சந்தர்ப்பம் வட பகுதி வங்கியாளர்களுக்கு காலம் தாழ்த்தி வந்தாலும் உரிய முறையில் பயன் படுத்துமாற அறிவுரை வழங்கினார் இக்கலந்துரையாடல்களில் ஒனாப் ஏ.ஆர் அகமட் நவாகப் திரு. க.பாலசுப்பிரமணியம் திரு..கே. விக்னராஜா ஆகியோர் சிறப்பு வளயவாளர்களாக பிரசன்னமாகியிருந்தனர்.

2001 ஒக்டோபர் எம் திகதி தொடக்கம் சனிக்கிழமைகளில் யாழ் மேற்தரக் கிளை திறந்து கடமையாற்ற வட மாகாண காரியாலயத்தின் உத்தரவ பிறப்பிக்கப்பட்டு தற்பொழுத தொடர்ந்தும் அவ்வாறு இயங்கிக் கொண்டு இருக்கிறது இவ் ஆரம்ப நிகழ்வுக்கு எமது வடபகுதி உதவிப் பொது முகாமையாளர் திருமதி ஆர் துரைராஜா அவர்கள் வருகை தந்து சிறப்பித்திருந்தார். இந்நாட்களில் ஏனைய வங்கிகள் சனிக்கிழமைகளில் திறப்பதில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது தற்போது யாழ் குடா நாட்டில் யாழ் அதி மேற்தரக் கிளை சுன்னாகம் நெல்லியடி என்பனவும் வன்னியில் வவுனியா மற்றம் முன்னார் ஆகிய கிளைகள் சனிக்கிழமைகளில் வாடிக்கையாளர் களுக்கு சேவை செய்யும் (Satuday Banking) நடைமுறைக்கு விஸ்தாக்கப்பட்டுள்ளது.

ஒக்ஸ்ட் 6 தொடக்கம் 50 வரை 20011ல் நல்லூர் வருமாந்த மஹோம்சவந ாட்களில் ஆலய முன்றலில் வங்கியின் விசேட கருமபீடம் அமைக்கப்பட்டு அங்கு விசேட ஆணையாளர் திரு. இராமலிங்கம் அவர்களின் பிரசன்னத்தொடு அன்றைய யாழ் மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் திரு.நடராஜலிங்கம் அவர்களம் பிரதேச முகாமையாளர் திரு.பொ. அ.ஆருமைநாயகம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் திரு. கே. நிசராஜ நர்மா அவர்கள் திறம்பட செயலாற்ற ரூ8.4 மில்லியன்கள் வைப்பாகத் திரட்டப்பட்டது. இறுதி நாள் உற்சவத்தின் போது ஒரு விசேட குலுக்கல் மூலம் அதிஷ்ட சாலிகளும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பாசல்களம் வழங்கப்பட்டது.

இந்நாட்களில் எமது வடமாகாண உதவிப் பொது முகாமையாளரும் வடக்கின் வங்கியாளர்களை மிகவம் கவர்ந்தவருமான திருமதி. ப. இரத்தினகுமார் அவர்கள் 30 வருட தனது சிறப்புமிக்க சேவையின் பின் 2001ல் ஓய்வு பெற்றார் இவருக்கான பிரிவுசாரம் சிறப்பாக யாழ்நகரில் கொண்டாடப்பட்டது.

13.03.2002 ல் திரு. ஜனக பொகோலேகம் எமது வங்கியின் தலைவர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். அவரது வருகையின் போது வாடிக்கையாளர்களது பிரச்சினைகள் எழுப்பப்பட்டு சொத்துக்கள் சம்பந்தமான கடனில் அடையமானமாகக் கொடுக்கும் சொத்துக்களின் தோம்பு முறிகளின் கால எல்லையை நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் ஏற்பட்ட பாதிப்பினை கருத்தில் கொண்டு 16 வருடங்களாகக் குறைப்பதற்கு அனுமதிக்கப்பட்டது இக்லந்துரையாடலுக்கு யாழ் வர்த்தகச் சங்க தலைவர் திரு. சி.சற்குணராஜா வட பகுதி உதவிப் பொது முகாமையாளர்

திருமதி மு. துரைராஜா பிரதேச முகாமையாளர் திரு. சி நடராஜலிங்கம் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்

2002ல் ஏப்பறலில் எமது வங்கியின் மேலதிகாரிகளின் யாழ் பிரசன்னம் நிகழ்ந்தததுத இக்குழுவின் பொது முகாமையாளர் திரு. A.S.D சில்வா DGM Branches & Devalopment ) T.S.றணசிங்க DGM Finance & Planning ) திருமதி கொடித்துவக்கு (AGM – II) திருமதி கே. துரைராஜா (AGM – NP) ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

2002 .4 .06 ம் திகதி முன்னாள் பொது முகாமையாளர் திரு. ஏ.எஸ் டீ சில்வா அவர்கள் திரு ரி.எ். றணசிங்கம் (DGM Branches Development Banking ) திரு. திலகநாதம் (D.S.M. Finance & Planning திருமதி கொதுவக்கு (AGM – Information & Techonology ) திருமதி கே. துரைராஜா (A.G.M Northern Province ) திரு. க. பாலசுப்பிரமணியம் (Operations Manager – Northern Province) பொறியிலாளர் திரு. சைமன் திரு.எஸ் சந்தரலிங்கம் (Srnior manager – Province sales management) ஆகியோர் சகிதம் யாழ் நகர் வருகை தந்தார் மறநாள் 02.04.2002 ல் அவர்களுக்கு மகத்தான வரவேற்பு யாழ் பிரதேச காரியாலயத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டதோடு வருகை தந்த பிரமுகர்கள் அனைவரும் யாழ் நகரில் பிரசித்தி பெற்ற நல்லூர் நாகதீபம் நயினாதீவு போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படட்டார்கள் அத்துடன் குடா நாட்டிலுள்ள கிளைகளுக்கும் விஜயம் செய்தார்கள். யாழ் நகரில் முக்கிய பிரமுகர்களான அரச அதிபர் வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கொண்டு நிறுவனங்களின் அதிகரிகள் ஆகியோரை சந்தித்ததோடு திருநெல்வேலியில் புதிதாக யாழ் பல்கலைக்கழகத்துக் அண்மையில் ஒரு இலங்கை வங்கிக் கிளை ஆரம்பிப்பதற்கும் ஆலோசனை எடுக்கப்பட்டது முக்கிய பிரமுகர்களுடன் இரவு விருந்துபசாரமும் நடைபெற்றது.

விடுதலைப்புலிகளுடன் ஏற்பட்ட விரிசல் காரணமாக 1990 வரை முடியிருந்த கொழும்பிற்கான பிரதான பாதை (ஏ9) 08.04 2002 ல் மறுபடியும் திறக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தால் யாழ் குடாநாட்டில் தன்னியக்க பணப் பரிமாற்றம் செய்யும் (ATM) கருவி 24.05.2002 அன்று யாழ் மேற்தரக் கிளை முன்பாக பொருத்தப்பட்டது. இது எமது உதவிப் பொது முகாமையாளர் திருமதி கே. துரைராஜா அவர்களின் தலைமையில் நடந்து (ATM) இயந்திரமும் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

01.07.2002 ல் யாழ் மேற்தரக்கிளை கணினி மயப்படுத்தப்பட்டு நாடளாவிய ரீதியில் வலைப்பின்னல் சேவைக்குள் திரு.ரி.எஸ் ரணசிங்க அவர்களால் வைபவ ரீதியாக அங்குராப் பணம் செய்யப்பட்டது மேற்படி வைபவம் சமய சம்பிரதயமான விழாவாக சிரேஷ்ட முகாமையாளர் திரு.எஸ் விக்கினராஜா தலைமையில் நடைபெற்றது இதற்கு சமயப் பெரியார்கள் ஆசி வழங்கி யாழ் முக்கிய பிரமுகர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து இவ்வாண்டின் முக்கிய நிகழ்வாக 11.11.1977ல் ஆரம்பிக்கப்பட்ட எமது சாவகச்சேரிக்கிளை முதற்தர (A) நிலைக்கு தரமுயர்த்தப்பட்டது.

19.02.2002 ல் எமது திருநெல்வேலிக்கிளை ஆரம்பிக்கப்பட்டது.

11..11.2002 ல் எமது யாழ் இரண்டாம் கிளை தனது 25ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது அன்றைய தினம் பொன்விழா மலரொன்றும் வெளியிடப்பட்டது. இவ்விழா அன்றைய முகாமையாளர் திரு.என். சிவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இக்கிளை யாழ் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வெற்றிவேலு யோகேஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்பட இதன் முதலாவது முகாமையாளராக எமது முன்னாள் உதவிப் பொது முகாமயாளர் திரு. முத்துமணி கனகரத்தினம் அவர்கள் பொறுப்பேற்றிருந்தார் என்பதும் இவ்விடத்தில் நினைவு கொள்ளத்தக்கது.

அன்றைய தினம் அதாவது 11.11.20002 லேயே திருக.பாலசுப்பிரமணியம் அவர்கள் உதவிப் பொது முகாமையாளராக பதவி உயர்வு பெற்று வடமாகாண காரியாலயம் யாழ் நகருக்கும் இடம் மாறி வந்தபின் பொறுப்பேற்ற நாளாகவும் அமைந்தது சிறப்பம்சமாகும்.

31.03.2004ல் அன்றைய உதவிப் பொமு முகாமையாளர் திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்கள் வன்னிப் பிரதேச முகாமையாளர் திருவி. ஐயம்பெருமாள் வருகைதர மன்னார் வங்கிக்குரிய புதிய கட்டத்திற்கான அடிக்கல் நாட்டிவைத்தார்.

28.06.2004ல் யாழ் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக தானியங்கி பரிவர்த்தனைன நிலையம் ஒன்று பா.உ.திரு. ஐ கஜேந்திரன் (பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

26.12.2004ல் ல் உலகையே ஆச்சரியத்தில் உறைய வைத்த சுனாமி ஸ்ரீ லங்காவையும் பாதித்தமையால் வடமராட்சியில் வல்வெட்டித்துறையிலிருந்து நாகர் கோவில் வரையுமான இடமும் வன்னியில் முல்லைத்தீவு கடற்கரைப் பிரதேசமும் பாதிக்கப்பட்டது. சுனாமி பேரலை தாக்கியதால் பொருட்சேதம் உயிரிழப்பு என்பன நிகழ்ந்தது. நமது நாட்டில் மட்டும் அல்லாது உலகையே உலுக்கிய பயங்கர கடற்கோளால் பாதிக்கப்பட்ட நமது மக்களக்கு இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையாலும் முல்லைத்தீவுக் கிளையாலும் சுனாமி பேரழிவுக் கடன்கள் கொடுகப்பட்டு தேசத்தின் வங்கியாளர் என்ற பெயருக்கு இலக்கணம் வகுத்து மகுடம் சூட்டிய ஆண்டாக இவ்வாண்டைக் குறிப்பிடலாம்.

இவ் அனர்த்தத்தின் போது எமது முல்லைத்தீவின் விரிவாகக்ல் கிளையில் இருந்த பணப் பெட்டத்துள் நீர் புகுந்து கொண்ட தென்பதும் தளபாடங்கள் அனைத்தும் சேதமடைந்ததென்பதும் நீர் மட்டம் மார்பளவுக்கு மேல் இருந்ததும் வரலாற்று வரிகளில் பதியப்பட வேண்டியவை.

தேசத்தின் வங்கியாம் இலங்கை வங்கியின் 22வது ஆண்டு யாழ் மேற்தரக் கிளை வெகு சிறப்பாக கொண்டாடிய பொழுது வங்கியின் சட்ட வல்லுனர் திரு. கே கனகரத்தினம் மாவட்ட முகாமையாளர் திரு.பொ.அ அருமைநாயகம் யாழ் மேற்தரக்கிளை செயற்பாட்டு முகாமையாளர் திரு. கே. உலகநாதன் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

65 ஆவது ஆண்டு நிறைவு நாள் யாழ் மேற்தரக்கிளையில் நடைபெற்ற பொழுது பிரதம விருந்தினராக திருமதி ம. சண்முகதாஸ் கடந்த காலங்களில் இலங்கை வங்கி செய்த சாதனைகளை பாராட்டினார்.

அவ்வாறு ஊர்காவற்துறைக் கிளையிலும் 16.09.2004ல் நடைபெற்ற 65 வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த வலயக் கல்வி அதிகாரி திரு.பி.வணுகொபல் எமது வங்கியின் வளர்ச்சி பற்றி குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை வங்கி வட மாகாணத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள சகல ஊழியர்களையும் ஒருங்கிணைத்து ஒரு யாழ் மாவட்ட விளையாட்டு நலன்பரிக்கழகம் எனும் பெயரால் கழகம் ஒன்று உருவாக்க அதன் மூலம் வங்கியாளர்களின் பிள்ளைகள் பரீட்சைகளில் உயர் கல்விக்கான திறமைச் சித்தி அடைந்தவர்களை வருடா வருடம் கௌரவித்து வருகின்றது.

அத்துடன் சேவையிலிருந்து ஓய்வு பெறும் வங்கியாளர்களையும் கௌரவித்து விழா எடுக்கின்றது மாவட்ட ரீதியில் விளையாட்டு மென்பந்து கிரிக்கட் போன்றவற்றில் ஏனைய மாவட்ட கழகங்களுடன் இணைந்து வங்கியாளர்கள் தொடர்ந்தும் நடாத்தி வருகின்றனர் .
மேலும் திறமையுள்ள யாழ் மாவட்ட வங்கியாளர்களைக் கொண்டு ஏனைய புதிய முகங்களுக்கும் ஏனையவர்களுக்கும் பயிந்சி பட்டறைகளை நடாத்தி வருகின்றது.

வடபகதி இலங்கை வங்கியின் விளையாட்டுக் கழகத்தின் 'ஊக்கி'' சஞ்சிகை வெளியிட்டு விழா 11.06.2007ல் நடைபெற்று அன்றிலிருந்து 3 மாதங்களுக்கொருமுஜற ஊக்கி சஞ்சிகை இன்றும் வெளிவருகிறது.

அத்துடன் கிளைகள் தோறும் தங்க நகை அடகுச் சேவையும் அறிமுகப்படுத்தப்பட்டு அதன் தேசை மக்களுக்கு பயனள்ள பல வழிகளில் உதவி செய்து வருகின்றது.

இக்கால கட்டத்தில் வட மாகாண இலங்கை வங்கிக்கிளைகளுக்க கணினிகள் தருவிக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்டது.

அவற்றின் விபரங்கள்

| | |
|---|---|
| மன்னார் | 23.03.2006 |
| யாழ்ப்பாணம் மேற்தரக் கிளை | 28.04.2006 |
| யாழ்ப்பாணம் 2ம் கிளை | 26.04.2006 |
| திருநெல்வேலிக்கிளை | 22.04.2005 |
| வவுனியா | 06.06.2006 |

மேலும் சில கிளகைள் கணினி வலைப்பின்றலுக்குள் கொண்டு வரப்பட்டது இதுவரை தலைநகர் கொழும்பிலிருந்து விசேடமாக தருவிக்கப்பட்டவர்களால் கணினி வலைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஏனைய பின்வவரும் கிளைகள் எமது யாழ் குடா நாட்டு சிறப்பு

பயிற்சி பெற்ற 3 ஊழியர்களான திருவாளர்கள் பிரேமராஜன் G. சகாதேவன், w விஜயகுமார் ஆகியோரின் தனி முயற்சியிலேயே கணினி மயப்படுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

| | |
|---|---|
| மானிப்பாய் | 17.12.2007 |
| பருத்தித்துறைக்கிளை | 17.12.2007 |
| நெல்லியடிக்கிளை | 24.12.2007 |

மேலும் கணனிகள் மயப்படுத்தப்பட்ட கிளைகளின் விபரங்கள் இவை யாவும் யாழ் கடா நாட்டு சிறப்பு பயிற்சி பெற்ற மேற் கூறிய ஊழியர்களினால் வலைப்பின்னலுக்குள் கொண்டு வரப்பட்டது என்பது வரலாற்று நிகழ்வு.

| | |
|---|---|
| சுன்னாகம் | 21.02.2005 |
| காங்கேசன் துறைக்கிளை | 11.02.2009 |
| காரைநகர் | 25.02.2009 |
| ஊர்காவற்துறை (300 வது கிளை) | 03.03.2008 |
| சாவகச்சேரி | 16.03.2008 |
| யாழ் கச்சேரி விரிவாக்கற் கிளை | 07.06.2008 |

அள்பிய சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வந்த சுன்னாகம் 01.06.2009ல் தரமுயர்த்தப்பட்டு மேறதரக்கிளையாக இன்ற செயற்படுகின்றது.

22.10.2009ல் தன்னியக்கப் பணம் பரிமாற் (ATM) இயந்திரம் மானிப்பாயில் பொருத்தப்பட்டது. அது போன்று நெல்லியடிக்கிளை முன்பாகவும் 3.10.2009ல் பொருத்தப்பட்டது.

29.10.2006 அன்று அச்சுவேலி விரிவாக்கற் கிளை அதன் வர்ச்சி காரணமாக தரமுயர்த்தப்பட்டு C கிளையாக மாற்றம் கண்டது.

29.06.2008 எமது பருத்தித்துறைக்கிளை தனது 50வது ஆண்டு பொன்விழாவினை வெகு சிறப்பாக கொண்டாடியது அதற்கான சிறப்பு மலர் வெளியூடும் வெளியிடப்பட்டது.

2008 நொவெம்பர் மாதம் 24ம் 27ம் திகதிகளில் யாழ் குடா நாட்டில் பெய்த குடம் மழை காரணமாக குடா நாடு முழுவதும் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியது லுட்சக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தார்கள் பல நூற்றாண்ட காலமாக இவ்வாறான வெள்ளப்பெருக்கை சந்தித்திராத மக்கள் ஒரு ஸ்தம்பித நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் 16 பேர் வரை இவ்வெள்ளத்தினால் மரணமானார்கள் எமது யாழ் இரண்டாம் கிளைக்குள் வெள்ளம் புகுந்தமையால் கீழ் தளக்கட்டிடத்தில் பொருந்தியிருந்த கணினிகள் யாவும் நீர் புகுந்து செயலிழந்தன. இதனால் வங்கிக்காசோலைப் பரிவர்த்தனை தாமதமடைந்தது. அதனால் இரண்டு தினங்கள் கடாநாட்டில் அநேகமான வங்கிக்கிளைக் தற்காலியமாக முடியிருந்தது.

2009 வருட ஆரம்பித்தலிருந்து வன்னியில் யுத்த முனைகளில் யுத்தம் அகோரமாக நடைபெற்றதால் அங்குள்ள வங்கி உறவுகள் எந்த வித தொலைத் தொடர்புகள் அற்ற நிலையில் இடம்பெயர்ந்து சரியான புள்ளி விபரங்கள் எடுக்க முடியா நிலை ஏற்பட்டுள்ளது.

காரணம் மூன்று தசாப்ப யுத்தம் வரலாற்றை முடிவுக்கு கொண்டு வருவதாக மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் முப்படைத்தளபதிகளுக்கும் அணை பிறப்பித்து இடைவிடாத யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழு லட்சக்கணக்கான மக்கள் வள்ளில் இடம் பெயர்ந்தார்கள் மன்னார் கரையிலிருந்து முல்லைத்தீவுக் கரை நோக்கி யுத்தம் ஆகோரமாக நடைபெற்றது மக்களோடு மக்களாக எமது வங்கி உறவுகளும் புலம் பெயர்ந்தார்கள் அவர்களோடு வெளியிடத் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் எமது வங்கி உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற தெரியா கால கட்டம் இருந்த பொழுதில் கூட எமது வங்கி உறவுகள் வங்கிப் பணனை தலைமேல் உயிராபத்து இருந்த நிலையிலும் தோள் மீது சுமந்தார்கள்.

அந்த வகையில் முன்தாக மாங்குளம் கிளை துணுக்காய் மல்லாவியில் இடம்பெயர்ந்த நிலையில் இயங்கிக்கொண்டிருந்த பொழுது மீண்டும் இலங்கை இராணுவம் துணுக்காயைக் கைப்பற்றும் நோக்கில் யுத்தம் 2008 மே மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து முகாமையாளர் திரு. கே.முனோகரன் அவர்கள் எமது மாங்குளம் கிளையின் சகல ஆவணங்களையும் கிளிநொச்சிக் கிளையின் மேற்தளத்திற்கு கொண்டு சென்று தொடர்ந்தும் வங்கிச்சேவை வாடிக்கையாளர்களுக்கு யுத்த சூழ்நிலையிலும் தொய்ந்து போகாதிருக்க நடவடிக்கை எடுத்து வந்த வேளையில் அது ஆண்டு செப்டெம்பர் மாம மளவில் யுத்தம் கிளிநொச்சி நோக்கி நகரவே மாங்குளம் கிளையுடன் கிளிநொச்சிக்கிளையும் இடம்பெயர வேண்ய கட்டாயத்துக்கு உள்ளாகின.

இந்த வேளையில் மாங்கும் கிளை சுதந்திர புரம் உடையார் கட்டு என்ற இடத்திற்கு நகர கிளிநொச்சிக்கிளை தரும்புரம் காணான் வளாகத்திற்கு மாற்றப்பட்டது. ஒக்டோபர் மாதத்திலிருந்து இவ்விருகிளைகளும் இடம் பெயர்ந்த கட்டிடங்களிலே தனித்தனியே இயங்கி வந்தன.

நாட்டின் தலைநகரோடு இணைக்கும் பிரதான பாதையானA9 பாதை நிரந்தரமாக மூடப்பட்டு தொடர்ந்தும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த நிலையில் திரவப் பணத் தட்டுப்பாடு நீங்குவதற்கு உதவி முகாமையாளர் திரு.கொ.வேலுகாவலர் அவர்கள் கிளிநொச்சி சென்று வரும் அரச வாகனங்களில் திரவப் பணத்தை வவுனியாவிலிருந்து எடுத்து வந்தார். இந்த நிலையில் ஊழியர்கள் மிகவம் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வங்கிக் கட்டிடத்திற்குன்ளேயே இரவுப் போமுதையும் கழித்தார்கள். முன்னதாக கிளிநொச்சிக்கிளை உதவி முகாமையாளர் திரு. கோ சேதுகாவலர் போர்க்காலச் சூழலில் அங்கு செல்வதற்கே யாரும் முன்வராத நிலையில் எமது உதவிப் பொது முகாமையாளர் திரு என் சிவரட்ணம் அவர்கள் பணிப்பிற்கமைய கிளிநொச்சி சென்று ஊழியர் பற்றாக்குறை இருந்த கிளிநொச்சிக் கிளைக்கு உற்ற துணை கொடுத்தார் தான் பெற்ற வங்கி அறிவை தன் இனிய பழகும் கபாவத்தால் வாடிக்கையாளர்களுக்கு அர்ப்பணித்தார். அதனால் எமது உதவிப் பொது முகாமையாளரின் எண்ணம் மட்டுமல்ல கிளிநொச்சியின் வாடிக்கையாளர் திருப்தியும் அடைவதற்கு வழிவகுத்தது.

ஆயினும் யுத்தம் தொடரவே எமது உதவிப்பொது முகாமையாளருடள் தொடர்பு கொண்டு அவரது பணிப்பிற்கமைய முல்லைத்தீவுக்கிளை இயங்கி வந்த புதக்குடியிருப்புக்கு இவ்விரு கிளைகளும் நகர்ந்தன.

இத்தகைய புத்தி சாதுரியம் துணச்சல் வடக்கின் வங்கியாளர்களுக்கு என்றுமே அவர்களுக்கு வரலாறு கற்றுத் தந்த பாடம் என்றே சொல்ல வேண்டும். அதனால் அவர்கள் வரலாற்ற வரிகளுக்குள் என்றும் நிலைத்திருப்பார்கள்.

வானக ஆளணி வசதிகளற்ற நிலையில் இரவொடு இரவாக யுத்த சூழ்நிலையில் கொட்டும் மழையில் முக்கிய ஆவணங்களையும் சில தளபாடங்களையும் கொண்டு செல்வதற்கு வைத்திய அதிகாரி (னூ.னு.ர்.ளு) தமது அம்புலன்ஸ் வண்டியையும் இரு ஊழியர்களுயும் தந்துதவ கிளிநொச்சிக்கிளை புதுக்குடியிருப்பு நோக்கி புலம் பெயர்ந்தது அங்கும் மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தமையால் கொண்டு சென்ற தளபாட ஆவணங்கள் இறக்க முடியாத நிலையில் முல்லைத்தீவுக்கிளை ஊழியர்கள் தங்கியிருந்த விடுதியில் இறக்கப்பட்டன. தொடர்ந்து இக்கிளை இயங்குவதற்கு அண்மையிலுள்ள ஒரு சிறிய வீடு ஒழுங்கமைத்து அங்கேயே இயங்கத் தொடங்கிய நிலையில் மீண்டும் யுத்தம் தொடரவே மழை போல் ஷெல் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்தமையால் முக்கிய ஆவணங்களை புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த முல்லைத்தீவுக் கட்டிடத்திற்கு கொண்டு சென்று தொடர்ந்தும் இயங்க முடியாச் சூழ்நிலையில் முக்கிய வங்கிச் செயற்பாடுகளை கணினிக்குள் பதிவு செய்து அவற்றைக் கைகளுக்கள் அடக்கிக் கொண்டு 21.01.2009ல் வவுனியா வந்து சேர்ந்தனர் இந்நடவடிக்கைகளுக்கு எமது உதவிப் பொது முகாமையாளர் திரு.என் சிவரட்ணம் அவர்கள் பணிப்புரை வழி நடாத்தியது என்பது முக்கியமாக கவனத்தில் கொள்ளத்தக்கது.

முல்லைத்தீவு நகர் நோக்கி யுத்தம் நகர்ந்த வேளை முல்லைத்தீவுக் கிளை முகாமையாளர் திரு. ஆனந்தராஜா அங்கு பணியாற்றிய ஏனைய உத்தியோகத்தர்களடன் இடம் பெயர வேண்டிய கட்டாயத்தின் சூழ்நிலைக் கைதியாகி வவுனியா வந்து தற்பொழுதும் இடைத்தங்கல் முகாமில் இருக்கின்றார். அதே வேளை வங்கியின் முக்கிய பதிவேடுகளை தனிப்பட்ட கணினிக்குள் பதிந்து எடுத்து வந்து அவற்றின் நடவடிக்கைகள் வவுனியாவில் தொடர்ந்தும் மேற்கொள்ள வசதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என்பது ஒரு மனநிறைவான வழிகாட்டலின் வரலாற்று நாயகர்கள் என்பது மட்டும் உண்மை அதேவேளை இடம் பெயர்ந்திருந்த கிளிநொச்சிக்கிளையின் உதவி முகாமையாளர் திரு.கோ சேதகாவலர் புதுக்குடியிருப்பில் இராணுவம் மிட்ட பகதியில் சிக்கியிருந்த வங்கிப் பண பாதுகாக்கும் பெட்டகத்தை இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தி இறதிவரை யுத்தம் பூமியில் நின்று வங்கிச் செயற்பாட்டுக்கு அரும்பணியாற்றி இடம் பெயர்ந்தார்.

இந்நாட்களில் ஏனைய வங்கிக்கிளைகளில் இருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவுக் கிளைகளுக்க அனுப்பிய பணக் கொடுப்பனவுகள் கூட சரியான பெறுனருக்கு கிடைக்காது வங்கிளாயர்களுக்கு அது விடயத்தில் வாடிக்கையாளர்களைத் திருப்தி படுத்த முடியா நிலை ஏற்பட்டது.

இத்தகைய மூன்ற வன்னியிலுள்ள எமது வங்கிக்கிளைகளின் செயற்பாடுகளை தொடர்ந்தும் நடாத்துவதற்கு ஏதவாகச் செயற்பட்ட மூன்று அதிகாரிகளான திருவாளர்கள் கே. மனோகரன், கே.சேதுகாவலர், எஸ் ஆனந்ததராஜா ஆகியோரோடு ஒத்துழைப்பு நல்கிய வங்கி உறவுகளும் அதற்கு உறுதுணை புரிந்தவர்களின் செயற்பாடுகளையம் பணிப்பமை வழங்கிய உமது உதவிப் பொது முகாமையாளர் திரு.என. சிவரட்ணம் அவர்கள் வங்கி மீது கொண்ட அக்கறையும் நடவடிக்கைகளையும் எங்காவது வங்கி தனது வரலாற்றுப் பதிவேடுகளின் ஒரு மூலையிலாவது பதிந்து வைத்திருக்கத் தவறினால் இவர்களது செயற்பாடுகள் முயற்சிகள் யாவும் என்றுமே குருடன் முன்னால் வரைந்து வைத்திருக்கும் அழகிய ஒவியத்துக்கு ஒப்பாகிவிடும்.

இது இவ்வாறிருக்க இத்தகைய யுத்த சூழ்நிலையில் யாழ் குடா நாட்டின் வெளிவரும் செய்தி ஊடாகப் பத்திரிகைகளான உதய் தினக்குரல் மற்றும் வலம்புரி பத்திரிகைகள் அவ்வப்போது எமது வங்கிக்காக செய்த செய்து வருகின்ற அளப்பரிய வங்கி பற்றிய செய்திகளும் ஆக்கங்களும் வங்கியின் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் ஒத்துழைப்பு நல்கிய ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் வங்கியின் தலைமைப்பீடமும் வங்கி உறவுகளும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டேயாக வேவண்டும்.

இவ்விடயத்தில் வலம்பரி இலங்கை வங்கியுடன் இணைந்து நாடாத்தும் பரீட்சையில் சித்தி பெற்ற உயர் கல்விக்குத் தகுதியான மாணவர்களைக் கௌரவிக்கும் விழாவில் பத்திரிகை தருகின்ற விளம்பரம் என்றும் வரவேற்கத் தக்கது என்பதை வங்கிச் சமூகம் நன்கு அறிந்துள்ளது. அவ்வாறே தினக்குரல் உதயன் பத்திரிகைகள் எமது வங்கியின் செயற்பாடுகள் புதிய சேமிப்புத் திட்டங்கள் போன்றவற்றை உடனுக்குடன் பத்திரிகையில் வெளியிட்டு வருவதும் பாராட்டத்தக்கது.

05.02.2009ல் வல்வெட்டித்துறையில் ஒரு விரிவாக்கம் கிளை ஆரம்பிக்கப்பட்டது இவ்விழாவானது எமது பருத்தித்துறை கிளை முகாமையாளர் திரு.கே.பி. ஆனந்தநடேசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது இதில் ஓய்வு பெற்ற வங்கி அதிகாரிகள் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் சம்பிரதாய பூர்வமாக நிகழ்ந்த இவ்விழாவினில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட எமது உதவிப் பொதுமுகாமையாளரின் பாரியார் திருமதி சிவரத்தினம் நளினி அவர்களால் இக்கிளை திறந்து வைக்கப்பட்டது.

2009 மார்ச் மாதம் அகில இலங்கை ரீதியில் இடம் பெற்ற Super Deposit mega draw ல் சுன்னாகம் கிளையின் வாடிக்கையாள் ஒருவருக்கு 5.2 மில்லியன் ரூபா பெறுமதியான புதிய கார் ஒன்று பரிசாக கிடைத்துள்ளமை வங்கியின் செயற்பாட்டுத்திறமைக்கு கிடைத்த பரிசாகும். இவ்வாண்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட Smart Invester Account க்கும் இக்கிளை வட பகுதியிலேயே முன்னணி வகிப்பதும் 2500 கணக்குகளுக்குமேல் ஆரம்பித்து வங்கியின் வளர்ச்சிப் பாதைக்கு செயல் வடிவம் கொடுத்து தலை நிமிர்ந்து நிற்கின்றது. என்பதும் வங்கி உறவுகளின் சாதனைக்கும் இக்கிளை சாட்சியம் பகிர்கின்றது.

2009 எபிறில் மாதம் 3ம் திகதி எமது அச்சுவேலிக்கிளை சர்வதேச வலைப்பினனலுக்குள் கொண்டு வரப்பட்டது. இதே மாதம் 6ம் திகதி எமது யாழ் பஸ்நிலைய வரவேற்புக் கிளை

திறக்கப்பட்டது. இவையிரண்டும் எமது உதவிப் பொது முகாமையாளர் திரு. என் சிவரட்ணம் அவர்களால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கே ஆரம்பிக்கப்ட்ட பாடசாலை சேமிப்புப் பிரிவுக் கணக்கினூடாக இலங்கை வங்கி 58 பாடசாலைகளில் தனது பிரிவுகளை ஆரம்பித்து வைப்புக்களை திரட்டி பாடசாலை மாணவர்களை ஊக்குவித்தும் வருகிறது. அந்தவகையில் ரூபா 4066 மில்லியன்களைவ ங்கி இதுவரை திரட்டியுள்ளது.

தற்பொழுது வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து முனாம்களில் தங்கியுள்ள புலம் பெயர்ந்தவர்களுக்கான வங்கி நடவடிக்கைகளை இலகுவாகச் செய்து கொடுகின்றது. அந்த வகையில் யாழ் மாவட்டத்தில் 12 முகாம்களும் வன்னி மாவட்டத்தில் 16 முகாம்களும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இருப்பினை உறுதி செய்வது நமது தலையாய உடமையாகும். இந்நிலையில் எமது புதிய தலைமுறையினருக்கு இன்றைய தரவுகளை எத்தகைய சவால்களுக்கு மத்தியில் எவ்வாறு இயங்கினோம் என்பதை விட்டுச் செல்வதால் அவற்றின் தன்மையினைப் புரிந்து கொண்டு இயங்கவார்கள் என்பதை அவர்கள் கைகளில் மனநிறைவோடு அஞ்சலோட்ட வீரர்கள் கையளிக்கம் அஞ்சலோட்ட கோலாக பதிந்து கொண்டால் அது முடிவுரையாகவன்றி ஒரு வளர்ச்சியின் எழுச்சிக்கு வித்தாகவே அமையும் என்பதே திண்ணம்

எனவே புதிய தலைமுறையினரின் கைகளுக்கு 31.03.2009 ன் மாகாண காரியாலய தரவு மில்லியன்களில் இவ்வாறு அமைகின்றது. என்பதை சமர்பிபத்து அவர்கள் அறிந்து கொள்வதற்கு ஏதவாகவும் அஞ்சலோட்ட வீரர்களின் கைகளில் ஒப்படைக்கும் கோலாகவும் இத்தரவுகள் எதிர்காலத்திற்கு நுழைவாயிலாக அமையும்.

| | |
|---|---|
| Demand | |
| Savings)….. | 339,087 |
| Time | 45,540 |
| No of Advances | 11, 624 |
| Overdraft | 1,567 |

மேலும் கிளைகள் தன்னியக்க பணப்பிவர்த்தனை பற்றிய இவ்வாறான அமைகின்றது.

| | |
|---|---|
| No of Branches | 17 |
| No of Extenslon offices | 9 |
| No of ATm | 10 |

மேலம் வளர்ச்சியை எட்டுவதற்கு ஏதுவாக புலம் பெயர்ந்த எமது அன்பிற்கினிய வாடிக்கையாளர்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும் அவர்களால் விட்டுச் சென்ற பழைய

கணக்குகளும் செம்மையாக்க பட வேண்டும் என்பதில் நாம் நமது புதிய தலைமுறையினருடன் குறிக்கோளாக இருப்போம்.

அந்த வகையில் புதிதாக இலங்கை வங்கியினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மாதிரிக் கிராமங்களில் சிறந்த வாடிக்கையாளர்களை இனங்காண்பதில் எமது வங்கி உறவுகள் ஆற்றி வரும் பங்களிப்பு எதிர் காலத்திட்டங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அத்தகைய குறிக்கோளை அடைவதற்கு எமது ஓய்வு பெற்ற உதவிப் பொது முகாமையாளர்கள் சிரேஷ்ட வாங்கியாளர்கள் மன்றும் தற்போதைய உதவிப் பொது முகாமைளாயர் தீரு. என. சிவரட்ணம் போன்றவர்களில் தலைமைத்துவ பண்புகளையம் அவர்களது வழிகாட்டல்களையும் ஏற்று தற்கால யுத்த சூழ்நிலையில் வங்கியின் வளர்ச்சிப் பாதையில் நடந்து செல்கின்றோம் என்பதனால் வெற்றியின் இலக்கு நச்சயமானதொன்று என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மேலம் இவ் ஆக்கத்தினை நெறியாள்கை செய்து அதிகார பூர்வமாக அங்கீகாரம் வழங்கி அனுமதியளித்த வழிநடத்தி வாசகர் கைகளில் தருவதற்கு எண்ணக்கருவை விதைத்த எமது அன்பின்கினிய உதவிப் பொமுகாமையாள் திரு என. சிவரட்ணம் அவர்களே என்பதை மகிழ்ச்சியடன் தெரியப்படுத்துகின்றேன்.

எழுத்தாக்கம்
திரு.எஸ் நடராஜா
இலங்கை வங்கி
யாழ் கச்சேரி விரிவாக்கற் கிளை